
Laodicean Times

# லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்



தொகுப்பு 9 தொகுதி 2 ஜூலை - செப்டம்பர் 2019

R 5410

## “இன்றைய நாளின் சூழ்நிலைகளில் அர்ப்பணித்தல்”

## “CONSECRATION AS RELATED TO PRESENT DAY CONDITIONS”

பரிசுத்தமாகுதலுக்கான மற்றொரு பெயர் அர்ப்பணித்தல், இது பிரிந்திருத்தலை அடையாளப்–படுத்துகிறது. பரிசுத்தமாகுதலும் அர்ப்பணித்தலும் நீதிமானாக்கப்படுதலோடு நெருக்கமான தொடர்புடையது. ஏனெனில் ஒருவர் பாவத்திலிருந்து தேவனிடத்திற்கு திரும்பி வரும்போது, பகுதியளவு நீதிமானாகுதல் நிகழ்ந்தாலும், அந்நபர் முழு அர்ப்பணிப்பு செய்யும் அந்த நேரம் வரும்வரை அங்கே ஜீவனுக்கேதுவான முழுமையான நீதிமானாகுதல் நிகழ்வதில்லை. ஆகவே ஒருவர் பாவத்திலிருந்து விலகி, தேவனை நோக்கி தன் பயணத்தை ஆரம்பிக்கும் நேரம் துவக்கி, தேவசித்தத்தை அறியவும் செய்யவும் தேடும்போது, அங்கே குறிப்பிட்ட அளவு அர்ப்பணிப்பு நிகழ்கிறது,தேவனுக்கென பிரிந்திருத்தல் நடைபெறுகிறது. தீமையைப் பின்பற்றுவதிலிருந்து மாறுபட்ட பண்பு துவங்குவதாக அங்கே தோற்றமளிக்கிறது. தேவனை நோக்கிவளர ஒருவர் எடுக்கும் படியானது, அது பரிசுத்தமாகுதல் மற்றும் நீதிமானாக்கப்படுதலுக்கான படியாகும்.

இதனை விளக்க, நிழலில் கூறப்பட்டுள்ள ஒரு சித்திரத்தை நாம் திரும்பிப் பார்ப்போம். விருப்பத்தோடு ஆசரிப்புக்கூடாரத்தை நெருங்கும் ஒரு லேவியர் அல்லது ஒரு ஆசாரியரை நாம் கவனிக்கும்போது, பிரகாரத்தை சுற்றிலுமுள்ள வெண்மை சுவரை தூரத்திலிருந்தே உணர்ந்து கொள்கிறார். தான் நெருங்கி சேர்கிற அதன் உள்ளே என்ன இருக்கிறது என்று ஓரளவு அறிவையே அவர் அடைந்து, அவர் வாசலை அடையும்பொழுது, பிரகாரம் என்பது ஒரு பரிசுத்தமான இடம் என்றும், உள்ளேயிருக்கும் வெண்கல பலிபீடத்தில் செலுத்தப்படும் பலியைப் புரிந்து ஏற்றுக்கொள்ளும்வரை, மறைக்கப்பட்ட அவ்விடத்திற்குள் எவ்விதத்திலும் யாரும் நுழையமுடியாது என்றும் புரிந்துகொள்கிறார்.

**நீதிமானாக்கப்படுதல் மற்றும் பரிசுத்தமாக்கப்படுதலில் முன்னேற்றம்**

ஓரளவு அர்ப்பணம் செய்தநிலையிலுள்ள நபர், ஓரளவு நீதிமானாக்கப்பட்ட நிலையில் உள்ளார். பிரகார வாசலில் நின்று, அவர் கற்கவேண்டிய பெரிதான பாடம் – தான் ஒரு பாவி என்பதையே, தேவன் பாவிகளை ஏற்கமாட்டார், கொடுக்கப்பட்ட மாபெரும் பலியை ஏற்றுக்கொண்டால் மட்டுமே அவரது அங்கீகாரம் பெறும் என்று உணர்ந்து, அவரை அணுகுவோர் மட்டுமே அவரால் ஏற்கப்படுவர். பலியை புரிந்துகொண்டபிறகு, பாவத்திலிருந்து நீதிமானாக்கப்படுவதற்கு கிறிஸ்துவின் மரணத்தின்மேல் நம்பிக்கையாயிருத்தல், இவற்றைப் புரிந்துகொண்டபிறகு, அவரது அடுத்த படிக்கல் ஆழமான அர்ப்பணிப்பு செய்தலாகும். இதன் மூலமாக முழு நீதிமானாகுதலை அடையலாம். அதை அவன் நடைமுறைப்படுத்துகையில், பிரகாரத்தின் தாமிரத் தண்ணீர்த்தொட்டிக்கு அவனைக் கொண்டுவந்து சேர்க்கிறது. மாம்சத்தின் அசுசிகளை கழுவிப்போக்குவதை இந்நிலைமை குறிக்கிறது. பாவத்திலிருந்து தன்னை விடுவிக்க தன் எல்லா வல்லமையையும் பிரயோகித்து, ஜீவியத்தில் அதிகதிகமாக தூய்மையடைவான். தேவனால் இதுவும் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆயினும் அவன் இன்னும் முழுமையாக நீதிமானாக்கப்படவோ, முழுமையாக பரிசுத்தமாக்கப்படவோ

### இம்மாத வெளியீட்டில்

| | பக்கம் |
|---|---|
| .... இன்றைய நாளின் சூழ்நிலைகளில் அர்ப்பணித்தல் ..... | 1 |
| ... உதவுதலின் ஆவி ..... | 5 |
| ... கடந்தகால, நிகழ்கால, எதிர்காலத்தின் திடமான செயல்பாடுகள்.. | 8 |
| ... இயேசு தாமே அருகில் வந்தார் ..... | 11 |
| ... என்னுடையதென்று சொல்லிக்கொள்ள எதுவுமில்லை ...... | 15 |

*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

Email- indianbiblestudents@gmail.com

இல்லை. அவன் தொடர்ந்து முன்னேறி, தேவனிடத்தில் இன்னும் நெருங்கிச் சேர்வதற்கு ஊக்கத்துடன் விரும்புகிறான், ஆசரிப்புக் கூடாரத்தின் கதவண்டையில் வந்துசேர்கிறான். அங்கே தன் மனித சித்தத்துக்கு மரித்தலாகிய மரணத்தின் மூலம் முன்னேறுவது ஒன்றே வைக்கப்பட்டிருப்பதை அவன் கண்டடைகிறான்.அவனது மனித உரிமைகள் மற்றும் ஆர்வங்கள் அனைத்தையும் இதில் ஒப்புவிக்கவேண்டும். மேலும் இந்த மரணம் பலிக்குரிய தியாக மரணமாக இருப்பதையும் பிரதான ஆசாரியரால் தான் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவனது முழு அர்ப்பணிப்பை பரலோகப்பிதா ஏற்குமுன்பாக, அவனது அபூரணங்களை பிரதான ஆசாரியர் தம் புண்ணியத்தை அருளுவதன் மூலம் பூரணமாக்கப்படவேண்டியதன் அவசியத்தை அவன் புரிந்துகொள்கிறான்.

ஆகவே ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதல் நிகழ்வதற்கு முன்னரே அவனது அர்ப்பணிப்பு(consecration) நிகழ்கிறது. இயேசு அவனை ஏற்றுக்கொள்வதற்கு முன்னரே அவன் தன்னை பலியாக ஒப்படைக்கவேண்டும், அவரது அங்கங்களில் ஒருவனாகும்படி, பிதாவின் முன்பாக அவன் தன்னை ஒப்புக்கொடுக்கவேண்டும். இது கிறிஸ்துவின் பூமிக்குரிய சரீரத்தில் உறுப்பினர் நிலையாக இருந்து, துன்பப்பட்டு, மரித்து, ஆவிக்குரிய சரீரத்தில் ஜீவன் மற்றும் மகிமை பெறும் உறுப்பினர் நிலையை அடைகிறான். அவனது அர்ப்பணிப்பானது முத்திரையிடப்படுதல் , பரிசுத்தஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டதற்கான அறிகுறியாக இருந்து, தெய்வீக அங்கீகாரம் பெற்றதைக் காட்டுகிறது. தேவனுடைய ஆழமான காரியங்களை புரிந்துகொள்வதன் மூலம், அவன் பரிசுத்தஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டிருப்பதன் அறிகுறியாக தெரிகிறது. இதை பரிசுத்தஸ்தலத்திலுள்ள சமூகத்து அப்பமேஜை மற்றும் நறுமணதூபபீடம்அடையாளமாகக் காட்டுகிறது. பெற்றுக்கொண்ட இந்த அறிவின்மூலம் செதுக்கப்படுதல், பளபளப்பாக்கப்படுதல் மற்றும் ஊழியம் செய்யும் வாய்ப்புக்களையும் அனுபவங்களாக அடைகிறான். சில விஷயங்களில் இந்த பல்வேறு படிகள் பெரும்பாலும் ஒரே சமயத்தில் நிகழ்கின்றன.

தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டபிறகு, தடைகள் நேரிடினும் விடாப்பிடியாக அர்ப்பண வாழ்வை சீராக காத்துக்கொள்ளவேண்டும். தேவனுடைய சுதந்திரராகவும், நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரராகவும், திரைக்கப்பால் ராஜரீக ஆசாரியக்கூட்டத்தில் பங்குபெறவேண்டுமானால், நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கவேண்டும். நாம் தற்கால ஜீவியத்தில் அவரோடுகூட துன்புற்றால் பின்னர் மகிமையில் நாம்அவரோடுகூட ஆளுகை செய்வோம்.

**1881ம் ஆண்டிலிருந்து அர்ப்பணிப்பவர்கள்**

1881இலிருந்து அர்ப்பணித்தவர்களில் ஒரு நபரிடமாவது, அவரது அர்ப்பணிப்பு தேவனால் ஏற்கப்பட்டதற்கு என்ன சாட்சியம் வைத்திருக்கிறார் ? ஏதாகிலும் சாட்சியம் இருக்கிறதா ? என்று சிலர் அக்கறையோடு வினவுகின்றனர். இதனைக் குறித்து நாம் கூறவிரும்புவது; எவ்வளவு சமீபத்தில் அந்நபர் அர்ப்பணிப்பை ஏற்படுத்தியிருந்தார் என்பதை சார்ந்தே உள்ளது. சற்றுமுன்பாக இருப்பின், அவரால் நிச்சயமாக தீர்மானிக்க முடியாது, ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் கடந்திருந்தும், பரிசுத்த ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டதற்கான சாட்சியங்களை அடையாதிருக்கிறாரா ? அதாவது, சத்தியத்தைப் புரிந்துகொள்ளவும், மதிப்பிடவும்கூடிய ஆற்றல் அடையாதிருக்கிறாரா ? சத்தியத்தை நேசிக்கவும், அதற்கு ஊழியம் செய்யும் விருப்பத்தை அனுபவமாக அவர் பெற்றிருக்கவில்லையா ; சத்தியத்துக்கு ஊழியம்செய்யும் சில வாய்புக்களையும், சில சோதனையின் அனுபவங்களையும் அவர் கண்டடைந்திருக்காவிடில், இப்படிப்பட்ட நபரது அர்ப்பணிப்பு தெய்வீக அங்கீகாரத்தை பெற்றிருக்கிறதா என்று ஐயப்பட நாம் காரணத்தை வைத்திருக்கிறோம்.

அப்படி இருக்குமானால், அந்த அர்ப்பணிப்பு முறையாக செய்யப்பட்டிருந்ததா என்று நாம் ஆச்சரியப்பட, மனதை ஒருபுறம் திருப்புகிறோம். தேவன் ஏதாவது ஒரு வழியில் ஒவ்வொரு அர்ப்பணிப்பையும் ஏற்றுக்கொள்கிறார் என்பதே நமது சிந்தையாயுள்ளது, நறுங்குண்டு நொருங்குண்ட இருதயத்தை அவர் இழிவாகக் கருதுவதில்லை. முற்காலங்களில் தங்கள் ஜீவியத்தை அவருக்கு தத்தம் செய்த தீர்க்கதரிசிகள் மற்றும் உண்மையுள்ள மாம்ச இஸ்ரயேலரை அவர் இழிவாகக் கருதவில்லை. அவர்கள் வெறுக்கப்படவுமில்லை, நிந்திக்கப்படவுமில்லை. தேவனை அவர்கள் பிரியப்படுத்தினதாக சாட்சியம் பெற்றிருந்தனர்(எபி 11:5). ஊழியம் செய்யும் வாய்ப்புக்களை அவர்கள் கண்டடைந்தனர். அவர்கள் தங்களது கீழ்ப்படிதலுக்கும், அவர்கள் செலுத்தின எல்லா பலிகளுக்கும் விசேஷ ஆசீர்வாதத்தை வெகுமதியாகப் பெற்றனர். ஆனால் அவர்கள்பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருந்ததாக இதற்கு பொருளாகாது.

தற்காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் எண்ணிக்கை இன்னும் நிறைவடையவில்லை என்பதற்கு நாம் ஒவ்வொரு காரணங்களையும் பெற்றுள்ளோம். ஏனெனில் கொடுக்கப்பட்டவைகளில் அநேகரது கிரீடங்கள் இழக்கப்பட்டிருக்கின்றன. உள்ளே நுழைகிறவர்களில்

கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான ஆதாரத்தை சிலர் நாளுக்கு நாள், வாராவாரம் கொடுப்பதை நாம் கண்டுவருகிறோம். அவர்களது ஜீவியத்தை அவரது ஊழியத்துக்காக ஒப்புக்கொடுக்க கர்த்தர் அனுமதித்திருப்பதற்கு அவர்கள் சாட்சியமளிக்கின்றனர். ஆனால் வெகுசீக்கிரம் தெரிந்துகொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை பூர்த்தியடையும் நேரம் சந்தேகத்திற்கிடமின்றி வரவிருக்கிறது. அப்பொழுது மட்டுமே, விழுந்துபோனவர்களது காலியிடங்கள் இன்னும் மீதமிருப்பது அறியப்படும். அப்படிப்பட்ட நிகழ்வு நேரிடும்போது, வீழ்ச்சியடைந்தவர்களின் இடத்துக்கு, தேவன் அர்ப்பணிக்கும் மனப்பான்மையுள்ளோரில் சிலரை ஏற்றுக்கொள்வார். இவர்கள் பரிசுத்த ஆவியின் ஜெனிப்பிக்குதலை அடைந்து, சத்தியத்துக்கு ஊழியம்செய்யவும், சத்தியத்தினிமித்தமாக துன்புறும் வாய்ப்புக்களையும் கண்டடைவார்கள்.

தெரிந்துகொள்ளப்பட்ட எண்ணிக்கையில், இன்னும் சில காலியிடங்கள் இருப்பதை தடயங்கள் காண்பிக்கின்றன. ஏனெனில் உலகிலிருந்து நேரடியாக தற்கால சத்தியத்துக்குள் ஜனங்கள் இப்போதும் வந்து, தங்களை அர்ப்பணிக்கின்றனர். 1,44,000 எண்ணிக்கையானது நிறைவடைய முழுமையாக அர்ப்பணித்தவர்கள் தற்போது போதுமான அளவு இல்லை என்று இது அறிவுறுத்துவதாகத் தோன்றுகிறது. அவ்வாறு போதுமான அளவு அர்ப்பணிக்கப்பட்டோர் இருந்திருப்பார்களானால், தங்களை பிரதிஷ்டைக்கு உட்படுத்தாதோரைக் காட்டிலும் இவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சராசரி கிறிஸ்தவனின் தற்போதைய நிலைமை**

கிறிஸ்தவ மண்டலம் முழுவதும் இன்றைக்கு, பெரிதான எண்ணிக்கையுடையோர், அர்ப்பணிப்பின் படியை பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ , ஓரளவு புத்திக்கூர்மையுடன் எடுத்திருப்பதாக தோற்றமளிக்கிறது. இதில் சிலர், மீட்பரையும் அவரது இரட்சிப்பின் பணியின் அவசியத்தையும், பாவத்தை சரிக்கட்டுவதற்கு தம் ஜீவனை அவர் கையளித்தார் என்றும் உணர்ந்திருக்கின்றனர். சிலர் இன்னும் கூடுதலாக, ஓரளவு புத்திக்கூர்மையோடு, ''தண்ணீர்த் தொட்டியில்'' தங்களை சுத்திகரித்தனர்.

ஆனால் பெரும்பாலானோர் இன்னும் கூடுதலான நிலைக்கு செல்லவில்லை என்று தோற்றமளிக்கிறது. ஏனெனில் இன்னும்மேலான நிலையின் தகுதியுடைமையை அவர்கள் காணவில்லை. கிறிஸ்தவ ஜனங்களில் பெரும்பாலானோர் இன்றைக்கு, ஒழுக்கஜீவியத்தைத் தவிர எந்தகூடுதலான நிலைக்கும் செல்ல விரும்புவதில்லை. அவர்கள் தேவனிடத்தில் அர்ப்பணிக்கும் எல்லையை வந்தடையவில்லை. இதன் காரணமாக, உயிர்த்துடிப்பான நீதிமானாக்குதலின் நோக்கத்தை அவர்கள் அடையவில்லை. பெரும்பாலானோர் ஒருவேளை, தண்ணீர்த்தொட்டியண்டை வந்தடைந்து, தங்களைக் கழுவி தூய்மைப்படுத்த விரும்புகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் தற்போது வெளியரங்கமாகிவருகிற ராஜ்யத்தின் செய்தியை கற்கிறார்கள். அதன்படி, இயேசுவின் பின்னடியார்களாக வருபவர்களுக்கான ஒரே நிபந்தனை – மரணபரியந்தமான முழு அர்ப்பணிப்பு என்று அறிந்து, அவர்களில் சிலர் இந்த அறிவில் பலனடைய தங்களை மகிழ்ச்சியோடு ஒப்புவிக்கிறார்கள். முழு அர்ப்பணிப்பு மற்றும் முழு நீதிமானாக்குதலை அடையும்பொருட்டு, அவர்கள் மகிழ்ச்சியுடன் முன்னோக்கிச் செல்கிறார்கள். இவர்கள் தங்கள் சூழ்நிலையை பகுத்தறிவுடன் கண்ணோக்குகையில், பல்வேறு சபைப்பிரிவுகளிலுள்ள பெரும்பாலானோர், தங்களை கிறிஸ்தவ ஜனங்கள் என்று உரிமை பாராட்டுவோர் தங்களை முந்தி செல்வதற்கு பதிலாக, தேர்ச்சியடைதலில் பின்தங்கியிருப்பதை விநோதமாக இவர்கள் பார்க்கின்றனர். கிறிஸ்துவோடுகூட உடன் சுதந்திரராகப் போகிறவர்களிடம் தேவன் இந்த விநோதத்தன்மையையே எதிர்பார்க்கிறார் என்பதை பெரும்பாலானோர் புரிந்துகொள்ள மாட்டார்கள். இந்த விநோதமானவர்கள், தேவபக்தி மற்றும் உண்மையாயிருத்தலின் வழிகளில் நடந்து, அவரது மகிமைநிறைந்த ராஜ்யத்தில், கிறிஸ்துவோடு ஆளுகை செய்யும் தகுதி பெறுவார்கள்.

**திரள்கூட்டம்**

வேதாகமத்தில் திரள்கூட்டம் என்று அழைக்கப்படுகிற இந்த வகுப்பார், மாபெரும் உபத்திரவத்தில் அகப்பட்டு, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தங்கள் ஆடைகளை கழுவி, தூய்மையாக்கிக்கொண்டு, அந்த உபத்திரவத்திலிருந்து வெளியே வந்தவர்கள்(வெளி 7:14). இவர்கள் நிஜமான லேவியர்களின் ஸ்தானத்திற்கு இறுதியில் தகுதிபெறுவர். இவர்கள் தெய்வீக அங்கீகரிப்பைப்பெற்று, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டு, முழு அர்ப்பணிப்பின் பல்வேறு படிகளைக் கடந்திருந்தார்கள். அவர்கள் கிறிஸ்துஇயேசுவுக்குள் புதுசிருஷ்டிகளாகி, பரிசுத்தஸ்தலத்திற்குள் நுழைந்தார்கள். ஆனால் வைராக்கியத்தின் விஷயத்தில் குறைவுபட்டதினாலும், நீடித்து உழைக்கும் திறனை இழந்ததாலும், பாபிலோனில் அவர்களுக்கு தயவற்ற சூழ்நிலை இருந்ததாலும், இவர்கள் முன்னேறுவதில் தோல்வியடைந்தனர். பரலோகத்துக்குரியவைகளை ஆதாயமாக்க உள்ள ஒரே

நிபந்தனையாகிய, பூமிக்குரிய காரியங்களை முழுமையாக பலிசெலுத்துவதில் தோல்வியடைந்தோராக காணப்பட்டனர்.

இவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலும், அதேசமயம் இவ்வுலக செல்வங்களைப் பின்பற்றுவதிலும் நாட்டங்கொண்டிருந்தனர். கர்த்தரைப் பிரியப்படுத்தத் தேடின இவர்கள் உலகைப் பிரியப்படுத்தவும் தேடினர், கர்த்தருடைய ஆவியில் சிலவற்றையும் உலகத்தின் ஆவியில் சிலவற்றையும் பெற்றிருந்தனர், பொதுவாக முன்னேற்றமடையாமலும் கோபம், வெறுப்பு, பொறாமை, சண்டை, தீயனபேசுதல் போன்ற மாமிசத்துக்குரியவைகளை விட்டுவிடாமலும், மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளை விட்டுவிடாமலும் இருந்ததால், விசுவாசம் தைரியம் ஞானம், இச்சையடக்கம்,பொறுமை, தேவபக்தி, சகோதரசிநேகம், சாந்தகுணம், பெருந்தன்மை, அன்பு ஆகிய ஆவியின் கனிகளை தரித்துக்கொள்ள முடியாமற்போயிற்று.

இவர்கள் சரியான பயிற்றுவிப்பாளரைப் பெற்றிருக்கவில்லை, ஆதலால் கர்த்தருடைய வார்த்தையை தவறாகப் புரிந்துகொண்டு, தவறான புரிந்துகொள்ளுதலை அடைந்தனர் என்பதையும் ஒத்துக்கொண்டாகவேண்டும். இருந்தபோதிலும், அவரது உண்மையான பிள்ளைகளாயிருப்பின், தேவன் இவர்களுக்கு வழிகாட்டுவார் என்ற விசுவாசத்தை நாம் உடையவர்களாயிருந்து, உபத்திரவங்களின் மூலமாக நேரிய நிலைப்பாட்டை எடுக்கும்படி நடத்தப்படுவார்கள்.

சிறுமந்தைக்குரிய ஆவிக்குரிய வளர்ச்சிக்கொப்பான நிலையை, திரள்கூட்டத்தார் அடைவார்கள் என்று வேதவசனங்களை தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. தேவன் தம்முடைய சிருஷ்டிகள் ஒவ்வொன்றிலும் பரிபூரண நிலைப்பாட்டை மட்டுமே உடையவராயிருக்கிறார் என்பதே உண்மை. ஆனால் அநேகர், எல்லாமே சாதகமாயிருக்கும்போது மாத்திரமே கர்த்தருக்கும், அவருடைய நீதிக்கும் உண்மையுள்ளவராயிருக்கின்றனர் என தமது வாழ்க்கையில் காண்பிக்கின்றனர். நெருக்கமான வழி மிகக்கடினமாகவும், உயரே செங்குத்தாகவும், கரடுமுரடாகவும் இருப்பதனால் மட்டுமே முன்னேறிச்செல்ல தைரியமின்றி இருந்தனர். ராஜரீக ஆசாரியக்கூட்டத்தாரில் பங்குபெற கர்த்தர் நியமித்திருக்கிற அடையாளக்குறியீடாகிய – அன்பு மற்றும் வைராக்கியத்தை வெளிப்படுத்துவதில் அவர்கள் தோல்வியடைந்தனர்.

தேவன் தேவதூதரிடமிருந்து என்ன எதிர்பார்த்தாரோ அதைக்காட்டிலும் அதிகமாக திரள்கூட்டத்தாரிடமிருந்து எதிர்பார்ப்பதில்லை என்று நாம் நம்புகிறோம். எவ்வாறெனில், சாதகமான சூழ்நிலைகளிலிருக்கும்போது, என் குழந்தையாக இருக்கவும், எனக்கு இசைவாக ஜீவிக்கவும் முன்னுரிமை கொடுக்கிறான். அவன் பாவத்தில் ஜீவிக்க நினைப்பதில்லை, என் நாமத்தை மறுதலிப்பதைக்காட்டிலும், துன்புற்று மரிக்க தயாராயிருக்கிறான். திரள்கூட்டத்து வகுப்பாருக்கு இப்படிப்பட்ட பரீட்சை இருக்குமானால், இந்த சுவிசேஷயுகத்தில் கடந்த காலங்களில்இந்த உண்மைத்தன்மையின் அளவை நிரூபித்துக் காட்டினோர் பத்து லட்சத்துக்கும் மேற்பட்டோராயிருப்பர். இறுதிப் பரீட்சைக்குட்படுத்தப்படும்போது இவர்களில் சிலர், ஒருவேளை இரத்த சாட்சிகளாகக்கூட இருக்கக்கூடும்.

**எதிர்ப்பு, ஆசீர்வாதமாக மாற்றப்பட்டது**

தங்களை அர்ப்பணித்தோரில் கணிசமான எண்ணிக்கையுடையோர் இன்னும் பாபிலோனிலேயே இருக்கிறார்கள் என்று நாம் நம்புவதற்கு நல்ல காரணமுண்டு என்று நாம் எண்ணுகிறோம். ஆயினும் இதை நாம் அறிவில்லை. நாம் அர்மகெதோன் யுத்தம் நடப்பதற்கு அருகாமையில் இருக்கிறோம். பாபிலோன் கவிழ்க்கப்படும் நேரத்துக்கு சமீபமாக இருக்கிறோம். மாபெரும் பரிசை வெற்றிகொள்வதற்கு மிகவும் காலதாமதமான போதிலும் இந்த வகுப்பார் கேட்டு வெளியேவரும் நோக்கத்திற்காக, சத்திய செய்தியை முடிந்தளவு பரவலாக கொண்டுசெல்ல நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். வெளிப்படுத்தல் 19ம் அதிகாரத்தில் அவர்கள் கணிசமான எண்ணிக்கையுடையோராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாபிலோன் விழுகையின்போது அந்நேரத்தில் விடுவிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை திரளானகூட்டமாக இருக்கும் என்றும், அவர்களது சத்தங்கள் திரளான தண்ணீர்களின் சத்தத்தைப்போல் இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

தற்காலத்தில் பெயர்சபைகளில் உள்ள பெருந்திரளானோரது சிந்தைகள் படிப்படியாக அதிகதிகமாக சத்தியத்துக்கென்று விழிப்பாயிருப்பதாக நாம் நம்புகிறோம். பல்வேறு பிரசங்க மேடைகளில், சத்தியம் எதிர்ப்புக்குள்ளானபோதிலும், ராஜ்யத்தைக் குறித்த சுவிசேஷத்தின் அநேக காரியங்கள் வெளிப்படையாக தெரியப்படுத்தப்படுகின்றன. இந்த செய்திகள் இந்த வகுப்பாரில் சிலருக்கு அறிவைப் புகட்டவும், விழிப்புணர்வூட்டுதலையும் ஏற்படுத்தும். இந்த சத்தியங்களை எடுத்துரைப்போரில் சிலர் பொறாமையினாலும், வஞ்சகத்தினாலும் எடுத்துரைத்தாலும், சுவிசேஷத்தின் செய்தி பிரசங்கிக்கப்படுகிறது(பிலிப்1:15–18). இவ்வாறு சில குறிப்பிட்ட சத்தியங்களால் அநேகரது கவனம் ஈர்க்கப்பட்டு, அழைக்கப்படுகின்றனர். ஆனால் நம்மால் சந்திக்கமுடியாத

அநேகருக்கு இந்த சத்தியங்களை ஒருபோதும் கொடுக்க முடிவதில்லை.

உதாரணமாக, பெயர்சபையே பாபிலோன் என்று நாம் நம்புவதை, இந்த ஊழியக்காரர்களில் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். மற்றவர்களோ, நம் கர்த்தர் தம் இரண்டாம் வருகையில் தற்போது பிரசன்னமாகியிருக்கிறார் என்றும், தம் சம்பத்துக்களை கூட்டிசேர்க்கிறார் என்றும் நாம் நம்புவதைப்பற்றி குறிப்பிடுகின்றனர்(மல்கி3:17). வேறு சிலரோ, அக்டோபர் 1914இல் புறஜாதியாரின் காலங்கள் முடிவுறுவதை நாம் நம்புவதாக தெரிவிக்கின்றனர். இந்த சத்தியங்கள் அனைத்தும் அவதூறான வழியில் அவர்களால் பேசப்படுகிறது. ஆனால் இக்காரியங்களில் அநேகமானவற்றை கர்த்தர் தம் ஜனங்களது நன்மைக்கேதுவாக மாற்றுவாரானால், நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சில காலத்துக்குமுன்னர், நமக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தின ஒரு சம்பவம், ஒரு நாளிதழில், ஒருநபர், செய்திப்பிரசுரத்தின் மூலமாக முதன்முதலாக சத்தியஅறிவை அடைந்ததாக நம்மிடம்கூறினார். மற்ற மனிதரோ, "நாம் அந்திக்கிறிஸ்து" என்று தன் போதகர்மூலமாகக் கேள்விப்பட்டதாகவும், அந்த அந்திக்கிறிஸ்து எப்படி இருப்பார் என்று காணவிரும்பி, எங்களைக் காணவும் எங்களது செய்தியை கேட்கவும் வந்து, சத்தியத்தைஅடைந்தார், அவதூறான வார்த்தைகளின் மூலமாக அவருக்கு சத்தியம் கிடைக்கப்பெற்றது. ஆகவே கர்த்தருடைய செய்தி சென்றுசேரவேண்டும் என்ற இலக்கை நாம் உடையோராய் இருக்கவேண்டும். சில விநோதமான காரியங்கள் நமக்கு நேர்ந்தாலும், நாம் தூற்றப்பட்டாலும், கொடிதான உபத்திரவங்களைக் கடந்துசென்றாலும், இதை புதுமையென்று நாம் எண்ணவேண்டாம். அவரது மகிமை வெளிப்படும்போது, நாம் சொல்லொண்ணா மகிழ்ச்சியடையும்படிக்கு, கிறிஸ்துவோடுகூட துன்பப்படுவதற்கு தகுதியானவர்களென்று எண்ணப்பட்டதற்காக நாம் சந்தோஷப்படுவோமாக – 1பேதுரு4:12–14; எபிரேயர்10:32,33.

---

**R 5412**

# "உதவுதலின் ஆவி"

# "THE SPIRIT OF HELPFULNESS"

"அடுத்தவருடைய நன்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் செயல்பட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழுங்கள்" – ரோமர் 15:2 (திருவிவிலியம்)

இங்குள்ள வசனத்தின்படி இளையவர்கள் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவாக அல்லது முதியவர்கள் அவ்வாறு செய்யவோ அப்.பவுல் இங்கு கூறாதபடி, மாறாக நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவாக நன்மையுண்டாகும்படி அவனுக்கு பிரியமாய் நடக்கக்கடவன் என்றே கூறுகிறார். கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் ஒருவருக்கொருவர் கர்த்தர் நிமித்தமாக அவ்விதமான ஆர்வமுடையவர்களாக இருப்பதோடு, எஜமானருடைய அந்த ஆவியை அதிகஅளவில் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அதாவது, குறிப்பக மற்றவர்களுடைய உழைப்பில் சுயத்தை திருப்திப்படுத்துவதைவிட தங்களைத் தாங்களே தியாகம் செய்கிறவர்களாக இருக்கவேண்டும்.

நாம் கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்போமானால் விசேஷமான வழிநடத்துதல்களுக்கு காத்திராமல் பல்வேறு வகையில் சுயத்தை பலியாக்கும் முறைகளை கண்டறியலாம். அன்பின் ஆவியானது நம்முடைய சொந்த இயல்பான முன்னுரிமைகளுக்கு எதிராக நம்மைத் தூண்டுவதோடு, அவ்விதமாக செயல்படும்போது நாம் ஒருவருக்கொருவர் நன்மையான வகையில் உதவிசெய்யலாம்.

கொரிந்து சபைக்கு அப். பவுல் தன் நிருபத்தை எழுதும்போது, இக்கொள்கையை கிரேக்க பாரம்பரியத்தில் நடைமுறையில் இருந்த கோவில்களில் படைக்கப்படும் இறைச்சியை மேற்கோள்காட்டி விளக்குகிறார். அவ்விதமாக விக்கிரகங்களுக்குமுன்பாக படைக்கப்பட்டபின்பு, அந்த இறைச்சியானது பரிசுத்தமானது என குறிப்பாக கருதப்பட்டது. அவ்வகையில் கிடைக்கக்கூடிய எல்லா இறைச்சியும் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதாயிருக்கும். எனவே யாரொருவர் இறைச்சி உண்ண விரும்பினால் அவ்விதமாக படைக்கப்படாத இறைச்சியை அவர் காணமுடியாது.

விக்கிரக வணக்கத்திலிருந்து வெளியேறி கிறிஸ்தவத்துக்குள் வந்திருந்தவர்கள், விக்கிரகங்களை ஆராதிப்பது தவறு என அறிந்திருந்தார்கள். ஏனெனில்

அவர்கள் ஒன்றான மெய்தேவனைக் குறித்து கற்றறிந்திருந்தார்கள். மேலும் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதினால் அந்த இறைச்சியும் எந்தளவும் பாதிப்புக்குள்ளாகாது எனவும்அறிந்தார்கள். ஏனெனில் விக்கிரகம் என்று ஒன்றுமில்லை. ஆனாலும் எந்தவொரு பெலவீனமான சகோதரருடைய மனசாட்சியை – அதாவது, விக்கிகங்களுக்கு படைக்கப்பட்ட அந்த இறைச்சியை இன்னும் புனிதமானதாகவோ அல்லது கறைபடிந்ததாகவோ அவர் எண்ணுவாராகில், அவருடைய மனசாட்சியாவது காயப்படாத வகையில் அதை தவிர்க்க அவர்கள் முன்வரவேண்டும். எனவே இவ்விஷயத்தில் விசாலமான அல்லது உண்மையான பார்வை இல்லாத ஒரு சகோதரருக்கு இடறுதலாக இருப்பதைவிட, முற்றிலும் தான் மாம்சம் புசிப்பதைவிட்டுவிடுவேன் என அப்போஸ்தலர் பிரகடனப்படுத்துகிறார். அவ்வாறான ஒருவரை இடறலடையச் செய்வது, நல்வழியில் இருந்து அவரை முற்றிலும் தூக்கியெறிவதாகும் என கூறுகிறார்.

**நம் உரிமையில் நம் பொறுப்பு**

மாம்சம் புசிப்பது சரியானதல்ல என அப்போஸ்தலர் கூறவில்லை. ஆனால் மற்றவருடைய பக்திவிருத்திக்காக தன் உரிமைகளையும் சிலாக்கியங்களையும் விட்டுக்கொடுக்க தான் முன்வருவதாக கூறுகிறார். மற்றவர்கள் என அப்போஸ்தலர் கூறுவது என்னவெனில், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மாம்சம் எவ்வகையிலும் பாதிப்படையவில்லை என்பதை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளாதவர்களாக இருப்பவர்கள் ஆவர். கற்சிலையின்முன் வைக்கப்படும் இறைச்சியோ அல்லது விக்கிரகத்தின் முன் வைக்கப்படும் இறைச்சியோ அவைகளால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் ஒரு சகோதரரை இடறலடையச்செய்வதைவிட முற்றிலுமாக இறைச்சியுண்பதை விட்டுவிடுவது எனக்கு மிகவும் நல்லது என அப்.பவுல் கூறுகிறார்.

இக்கொள்கையானது வெளிப்படையானது. நாமும்கூட அவசியமிருப்பின், எந்தவொரு சகோதரருக்கு உதவும் வகையிலோ அல்லது இடறலடையச் செய்யாதிருக்கும் விதமாக நம்முடைய சில உரிமைகளை விட்டுவிட முன்வரவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளில் சிலர் உணர்ச்சிமிக்கவர்களாகவும், சிலர் அதில் குறைவானவர்களாகவும் இருப்பர். இதில் அதிக உணர்வுள்ளவர்கள் கிறிஸ்துவின் பள்ளியில் அதிக பலமுள்ளவர்களாக கர்த்தருக்கு பிரியமானவை எவை என சுலபமாக அறிந்துணர்ந்திருப்பர். ஒரு கிறிஸ்தவராக இருப்பதினால் கர்த்தருக்கு எதிரான எந்தவொரு காரியத்தையும் செய்ய விரும்பாதவராக, தன் வாழ்வின் மீதியுள்ள காலம் முழுவதையும் மாம்சம் புசியாமல் இருக்கவேண்டுமானாலும் கூட அவர் இருப்பார்.

ஆனாலும் தன் சொந்த மனசாட்சி அங்கீகரிக்கும் எந்தவொரு முடிவை எடுக்கும்போது, தன் நுண்ணறிவின்படியோ அல்லது மனதின் யோசனையின்படியோ எந்தவொரு சகோதரருக்கு காயம் ஏற்படுத்தும் வகையில் அவற்றை அனுமதிப்பாரா ? என்ற கேள்வி எழும்புகிறது. ஒரு சகோதரர் பெலவீனமடையும்பொருட்டு இடறலடையச் செய்யவோ அல்லது தன் மனசாட்சியை அவர் மீறும்பொருட்டோ செய்ய விரும்புவாரா ? அல்லது தன் சகோதரன் நன்மையடையும்பொருட்டு தனக்குண்டான எல்லாவற்றையும் இழக்க விரும்புவாரா ? அப்.பவுல் இதற்கு மறைமுகமான பதிலை அளிக்கிறார்; அவர் கூறும்போது, சகோதரருக்கு விரோதமாக ஒருவர்அவ்விதமான பாவம்செய்து அவருடைய பெலவீனமான மனசாட்சியைக் காயப்படுத்தும்போது, கிறிஸ்துவுக்கு எதிரான பாவமாக அது இருக்கிறது. ‘‘ஆகையால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நன் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன் ’’ – 1கொரிந் 8:1–13.

**ஞாயிறு ஆராதனை**

மேற்கண்ட கொள்கையை ஞாயிறு ஆராதனை அனுசரித்தல் விஷயத்தைப்பொருத்தவரையில், யூதர்கள் ஓய்வுநாளை கடைப்பிடித்ததுபோன்று அடிமைத்தன முறையாக எண்ண வேண்டுவதில்லை. ஆனாலும் நாம் சாமார்த்தியத்தை பயன்படுத்துதல் (Driving tacts) அல்லது தேவையற்ற சத்தத்தை தவிர்க்கவேண்டும். இசைக்கருவியை மீட்டியபடியே பாடுவதை நாம் தவிர்க்கவேண்டும். அவ்வாறு செய்வது, பொதுவாக, பரிசுத்தமான காரியங்களை காத்துக்கொள்வதாக பொதுவாக உணரப்படாது.

ஓய்வுநாளை கடைபிடிக்கக்கூடாது என கருதும் மற்றவர்களுடைய கருத்தை நாம் நிராகரிக்கவேண்டும். இதை நம்முடைய நன்மைக்காகவே செய்யவேண்டும். நாம் அறிந்திருக்கிறபடி ஒவ்வொரு நாளும் மாபெரும் ஓய்வுநாளின் ஒரு பகுதியாக இருப்பதோடு, கிறிஸ்துவுக்குள்ளாக நாம் இளைப்பாறுவதைக் குறிக்கிறது. நாம் ஒரு மாபெரும் சுயாதீனத்தைப் பெற்றிருக்கிறோம். ஆனால் மற்றவர்களை காயப்படுத்துவதற்காக இந்த சுயாதீனத்தைப் பயன்படுத்தக்கூடாது.

ஓய்வுநாளில் எந்தஒரு வேலை செய்வதும் நான்காம் கட்டளையை மீறுவதாயிருக்கும் என அநேகர் நினைக்கின்றனர். நம்முடைய பார்வையின்படி

யூதர்களுடைய ஓய்வுநாள் ஒரு அடையளமாக இருக்கிறது. மேலும் அதினுடைய நிஜம் என்ன என்று நாம் காண்கிறோம். ஓய்வுநாளின் நிஜத்தை நாம் அனுபவிக்கிறோம். ஆனாலும் ஞாயிற்றுக்கிழமையில் வேலை செய்வதற்கு நாம் சுயாதீனம் பெற்றிருக்கும் அதே வேளையில், அவ்வாறு செய்தல் ஒருவேளை நம்முடைய அயலானுக்கு இடறல் உண்டாக்க நேரிடலாம். ஞாயிற்றுக்கிழமையை அநுசரிக்காமல் இருக்கும் எந்தவொரு கொள்கையையும் நாம் மீறுவதில்லை. ஆனால் நம்முடைய அயலானை இடறலடையச் செய்யாதபடி, நம்முடைய வேலைக்கு அந்நாளில் செல்லாமல் இளைப்பறுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் தேவனுடைய வார்த்தைகளை தியானம் செய்ய நம்மை நாமே தருகிறோம்.

கிறிஸ்தவ ஜனங்கள் பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளை எவ்வாறு அனுசரிக்கலாம் என, அவர்கள் எண்ணுவதுபோல் கடைப்பிடிப்பதில்லை. அநேகருடைய கருத்தானது யூதருடைய பிரமாணத்தின்படி மிகவும் கண்டிப்பான முறையில் இருக்கவேண்டியதாகும். மேலும் ஒரு காளையோ கழுதையோ, மோட்டார் வண்டியோ அல்லது நீராவி கார்களையோ உபயோகிக்கக்கூடாது என்கின்றனர். நிஜமாகவே, ஓய்வுநாளில் எந்தவொரு நீண்டதூரத்தையும் அடைய பிரயாணம் செய்யும் உரிமையை அவர்கள் எண்ணிப் பார்க்காமலிருக்கக்கூடும்.

உண்மையின்படி, தற்கால பெயர்சபைகள் அவர்களுடைய சொந்த புரிதலின்படிகூட தேவபிரமாணத்தின்படி நடப்பதில்லை. நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக இப்படிப்பட்ட ஜனங்கள் ஓய்வுநாளைக் குறித்தான உண்மையினை தெரிந்துகொள்ள உதவலாம். ஆனாலும் அவர்கள் மனசாட்சி காயப்படாமல் அவர்களுடைய மனவேதனையினின்று அவர்களை விடுதலையாக்கலாம். ஞாயிற்றுக்கிழமையானது எவ்வகையிலும் அமைதியான மற்றும் பயபக்திக்குரிய நாளாக இருக்கவேண்டும். அந்நாளில் வியாபார சம்பந்தமானவைகள் கட்டுப்படுத்தப்பட்டோ அல்லது கூடுமானவரை தூக்கியெறியப்பட்டு தேவ ஊழியத்துக்கென்று விசேஷமாக அர்ப்பணிக்கப்படவேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளில் கர்த்தருடைய பணியில் ஆர்வங்கொண்டு நீராவி மோட்டார் வாகனங்களையோ, தெருக்களில் இயக்கும் வாகனங்களையோ உபயோகப்படுத்துவதிலிருந்து நாம் எப்போதும் தடைசெய்யப்படுகிறோம்.

அப்போஸ்தலர் பயன்படுத்தியதுபோல்(**எபி4:9**), ஓய்வுநாள் என்பது இளைப்பாறுதலை அடையாளப்படுத்துவதை நினைவில் கொள்ளும்போது, கிறிஸ்துவின் சபையானது ஒவ்வொருநாளும் ஓய்வுநாளை அல்லது இளைப்பாறுதலை அநுசரிப்பதோடு, இது விஷயமாக தேவனுடைய ஏற்பாடுகளை உணர்ந்துகொள்கின்றனர். சபையைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஏழாம் நாளை கடைப்பிடித்தாலும் விசுவாசத்தில் இளைப்பாறாமல் அல்லது இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க தவறினால் அவர்கள் உண்மையான ஓய்வுநாளை அநுசரிக்காமல் வேறொன்றைக் கடைப்பிடிக்கின்றனர்.

ஓய்வுநாள் நியமனம் யூதர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. நம்முடைய உடன்படிக்கையின் கீழாக மேலான ஒரு ஏற்பாட்டை பெற்றிருக்கிறோம். நாம்அநுதினமும் இளைப்பாறுதலில் நம்முடைய ஓய்வில் பிரவேசிக்கின்றோம். நாம் இன்னும் மேலான ஓய்வுநாளுக்குள் விரைவில் பிரவேசிப்போம் என நம்புகிறோம். அந்த ஓய்வுநாளாகிய ஆயிரமாண்டில் இருதயத்தில் மாத்திரம் இளைப்பாறாமல், பரிபூரணத்திலும் இளைப்பாறுவோம். மேலும் அதன்பின்பு வாழ்க்கையில் சோதகைளாலோ அல்லது சிரமங்களாலோ சூழப்பட்டிருக்கமாட்டோம். இயேசு தம்முடைய ஊழியத்தில் அற்புதங்களையும், வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கவும் ஓய்வுநாளையே தெரிந்துகொண்டார். ஏனெனில் அந்த மாபெரும் ஓய்வுநாளாகிய ஏழாவது ஆயிரமாண்டில், அதாவது ஆயிரமாண்டு ஆட்சியில், தாம் நிகழ்த்தும் அம்மாதிரியான செயல்களையே அப்போது நிகழ்த்திக் காண்பித்தார்.

**நம் அயலாருக்கு தடைசெய்கிறவர்களாயல்ல, உதவி செய்பவர்களாக**

இக்கோட்பாட்டை நாம் பொதுவான வகையில் செயல்படுத்தலாம். நாம் இதை கிறிஸ்தவ ஜனங்களோடு உரையாடுவதில் பயன்படுத்தலாம். அறியாமையில் இருக்கும் ஜனங்களை இகழ்ந்துபேச ஒரு வழியுண்டு. ஆனால் இது அன்பல்ல. அன்பானது மற்றவர்களுடைய பெலவீனங்களை வெளிப்படுத்துவதில் மகிழாது. நம்முடைய வார்த்தைகளிலும் செயல்களிலும் கவனமாயிருந்து, கண்ணியமாக இருப்போமேயானால் நாம் உதவிகரமுள்ளவர்களாவோம்.

'' கண்ணியம் என்பது கருணையானதை, கருணையின் வழியில் பேசும், செய்யும்''

ஒருவர் கொள்கை அல்லது கோட்பாட்டின் அடிப்படையில் கண்ணியமாக இருக்கலாம். நமக்கு அடுத்தவர்களை நாம் பிரியப்படுத்துதல் அவர்களுடைய பக்திவிருத்திக்காக இருக்கவேண்டும். அவர்களுக்கு உதவிகரமாக இருப்பதிலும், அவர்களது வளர்ச்சியிலும், அவர்களை எழுச்சியடையச் செய்வதிலும், அவர்களை கட்டியெழுப்புவதிலும் நாம் களிகூறுகிறவர்களாயிருக்கவேண்டும். நாம் ஒரு இனிமையான, கருணையான வார்த்தையைப் பேசும்போது,

அது அவர்களை கட்டியெழுப்ப உதவும். மேலும் அன்பில்லா வார்த்தைக்குப் பதிலாக அன்பான வார்த்தை பேசியே ஆகவேண்டும்.

நாம் மற்றவர்களை கட்டியெழுப்புவதே நம் மனதில் முதன்மையான காரியமாக இருக்கவேண்டும். அப்போஸ்தலர் கூறுவதுபோல், "ஒருவரையொருவர் கவனித்து" ஒருவரையொருவர் தூண்டுவதற்கு நமக்குத் தெரிந்தபடி பலவழிகள் இருந்தாலும், பரிசுத்த பவுல் நமக்கு சரியான வழியை காட்டுகிறார். கோபம் வெறுப்பு சண்டை போன்றவற்றில் தூண்டப்படுவதற்கு பதிலாக எதிர்மறையானதை தன் மனதில் கொண்டிருந்தார். மிகவும் நேர்மையான நமக்கு பிரியமான சகோதரரில் சிலரும் இவ்விஷயத்தில் சத்தியத்தின் ஆவியை பெறாதவர்களாக உள்ளனர். மேலும் அவர்கள் எங்குசென்றாலும் மற்றவர்களை அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் ஏதுவாக நற்சிந்தை பெறும்படி தூண்டாமல், அவர்களின் தீயமனதைத் தூண்டுவதில் பொருத்தமாக செயல்படுகின்றனர்.

நமக்கு அடுத்தவர்களை பிரியப்படுத்துதல் என்பது நன்மைக்கும் நீதியான கொள்கைகளுக்குமாக இருக்கவேண்டும்.மாறாக அவர்களை அநீதியில் கட்டியெழுப்புவது சரியானதல்ல. நம் அயலாருடைய கோழிக்குஞ்சுகள் நம்முடைய தோட்டத்தில் எங்கும் சுற்றித்திரிய அனுமதிப்பது சரியானதென்று நாம் எண்ணக்கூடாது. நாம் நீதிக்காக உறுதியாக நிற்பதன்மூலம் அவர் அதிக பக்திவிருத்திக்கேதுவாக பலப்படுவார் என நாம் நினைக்கலாம். ஆனால் அவர் அவருடைய கோழிக்குஞ்சுகளை எவ்வாறு கையாளவேண்டும் என அவருக்கு நாம் தெரிவிக்கக்கூடாது. நம்முடைய இடத்திலிருந்து அவரது கோழிக்குஞ்சுகளை போகச்செய்வதற்கு நாம் இயன்றளவிற்கு சிறப்பான முயற்சி மேற்கொள்ளலாம். அதற்கு மாறாக அவருடைய வீட்டிற்குள் சென்று, அவருடைய கோழிக்குஞ்சுகளையோ, குடும்பத்தாரையோ, குழந்தைகளையோ அதிகாரம் செய்தால் நாம் தவறுகிறவர்களாயிருப்போம். அவ்வாறு செய்தால் நாம் வீண் அலுவற்காரராகிவிடுவோம். நம்முடைய சொந்த குடும்பத்தின் பெலவீனங்களை கண்காணிப்பதே நமக்கும் போதுமானதாகும்.

---

**R 5413**

# கடந்த கால, நிகழ்கால,எதிர்காலத்தின் திடமான செயல்பாடுகள்

# COURAGEOUS DEALING - PAST, PRESENT AND FUTURE

**திறவுகோல் வசனம்** : "நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள். உத்தமனுக்குக் கர்த்தர் துணை"
– 2நாளாகமம் 19:11.

தேவனுக்கு ஊழியம் செய்ய அங்கீகரிக்கப்பட்டவர்களின் நடவடிக்கைகளில் தெய்வீக மேற்பார்வை இருப்பது இங்கு புரிந்துகொள்ளப்படுகிறது, மேலும் நீதியாய் நடந்துகொள்கிறவர்கள் எல்லார் மீதும் தெய்வீக ஆசீர்வாதம் இறுதியில் எதிர்பார்க்கப்படுகிறது. வேதாகமத்தின் மார்க்கமாகிய கிறிஸ்தவ மார்க்கத்தைப்போன்றே, எல்லா புறஜாதி மார்க்கங்களும், தெய்வீக ஆசீர்வாதத்தை எதிர்பார்ப்பதற்கு தங்கள் பக்தர்களை வழிநடத்த விரும்புகின்றன. ஆனால் வேதாகமத்தைப்போன்று ஒரு நீதியுள்ள தேவனை மற்ற எந்த மார்க்கமும் ஏற்படுத்தவில்லை. வேறு எந்த மார்க்கமும் நீதியின் கொள்கையின்மேல் ஸ்தாபிக்கப்படவில்லை. வேதாகமம் ஏன் சுயாதீனத்திற்கான ஆற்றல் வாய்ந்த செல்வாக்கை உடையதாயிருக்கிறது என்பதற்கு இது ஒரு காரணமாயிருக்கிறது. அது எங்கு சென்றாலும், "உலகத்திற்கு ஒளியூட்டுகிற சுயாதீனமாக" இருந்துவருகிறது.

சிருஷ்டிகரிடத்தில் பாரபட்சம் இல்லை – உயர்ந்தவன் தாழ்ந்தவன், ஐஸ்வரியன், தரித்திரன், உயர்குடிமகன், விவசாயி என்கிற வகுப்பு வேறுபாடுகள் அவரிடத்தில்இல்லை. இந்த காரணத்திற்காகவே கர்த்தரின் போதனைகள் இஸ்ரயேலர்களுக்கு முன்பாக வைக்கப்பட்டபோது, அவர்கள் சுயாதீனத்தை நேசிக்கிற ஜனங்களாக இருந்தனர். அவர்கள் விக்கிரக ஆராதனைக்குள் விழும்அளவிற்கேற்ப, அவர்கள் இந்த ஆவியை இழந்தனர்.

**வேதாகமம் சுயாதீனத்தின் ஆவியைக் கொண்டுவருகிறது**

நிச்சயமாக, சுயாதீனத்தின் ஆவியுடன் வீரத்தின் ஆவி செல்லும். எனவே ஆதிகால சபை தங்கள் துன்பங்களை தாங்கிக்கொள்வதில், வீரம் மிக்க பண்புகளின் ஆதாரமாக வேதாகமம் இருக்கிறது. பிற்பாடு இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் ஆகியோரின்

எழுத்துக்களுக்கு பதிலாக, மனிதப் பாரம்பரியங்கள் மற்றும் புறஜாதிகளின் தத்துவங்களுக்கு கவனம் செலுத்தப்பட்டபோது, அதற்கேற்ற விகிதத்தில் அடிமைத்தனத்தின் ஆவி, பயத்தின் ஆவி, அறியாமையின் ஆவி மேலோங்கி, இருண்டயுகங்களைக் கொண்டுவந்தது. தேவனுடைய வார்த்தையிலிருந்து வந்த ஆசீர்வதிக்கப்பட்ட செல்வாக்குடன் சீர்திருத்தத்தின் காலத்திலிருந்து துவங்கி, சுயாதீனத்தின் ஆவியானது அதிகமாக வெளிப்படுத்திக் காட்டப்பட்டதை நாம் காண்கிறோம். எங்கெல்லாம் வேதம் சென்றிருக்கிறதோ அங்கே சுயாதீனத்தின் ஆவியும் சென்றிருக்கிறது. எங்கெல்லாம் வேதம் செல்லவில்லையோ அங்கே சுயாதீனத்தின் ஆவி மேலோங்காது.

வேதத்தைப் புறக்கணித்த கிறிஸ்தவ நாடுகள் என்று அழைக்கப்பட்ட நாடுகளாகிய, ரஷ்யா, ஸ்பெயின், போர்ச்சுக்கல், பிரான்ஸின் பெரும்பாலான மாகாணங்கள், போலந்து போன்ற நாடுகளும்கூட இதற்கு சாட்சி. வேதம் எங்கு இருக்கிறதோ அங்கு சுயாதீனமானது அதிகமாக வெளிப்படுத்திக் காட்டப்படுகிறது. வேதத்தை ஜனங்கள் அடையாளங்காணாத இடத்திலும்கூட, வேதபோதனைகளின் ஆவி, அதன் விளைவை உடையதாயிருக்கிறது. அங்கே அனைவரும் ஒரே மாம்சமாகவும், இரத்தமாகவும், ஒரே பொதுவான சகோதரத்துவமாக இருக்கிறோம் என்று உணர்கிற சில காரியங்கள் நிகழ்கிறது. தேவன் பூமியின் மீதெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களையும் ஒரே இரத்தத்தினால் தோன்றப் பண்ணினார்(அப்17:26). பிறப்பு, கல்வி ஆகியவற்றின் வழியில் நிச்சயமாக அனுகூலங்கள் இருக்கிறது. பலதரப்பட்ட சூழ்நிலைகள் நிலைமைகளை பாதிக்கிறது. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலான மாபெரும் நியாயாதிபதியாயிருக்கிற சிருஷ்டிகரிடத்தில் மனுக்குலம் அனைத்தும் பொறுப்புள்ளவர்களாயிருக்கின்றனர். வெகுமதிகளையும் தண்டனைகளையும் கொடுக்கிற ஒருவராக அவரை நாம் பார்க்கவேண்டும்.

## நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழான விசேஷ செயல்பாடுகள்

நம்முடைய திறவுகோல் வசனம், ஒரு சீர்திருத்தவாதியாக இருந்த மாபெரும் யூத இராஜாவின் வார்த்தைகளைக் கொடுக்கிறது. ஜனங்களின் பழக்கவழக்கங்களில் பல்வேறுபட்ட அளவிலான அநியாயங்கள் தனக்கு முன் வாழ்ந்த இராஜாக்களினால் புகுத்தப்பட்டிருப்பதை அவர் கண்டார். அதிகாரிகளையும், நியாயாதிபதிகளையும் நியமித்து, யோசபாத் இராஜா, நீதியின் கொள்கைகளுக்கேற்ப தங்கள் கருத்துக்களை தருவதற்கு அவர்களை வற்புறுத்தினார். அவர், ''நீங்கள் திடமனதாயிருந்து காரியத்தை நடத்துங்கள், உத்தமனுக்கு கர்த்தர் துணை'' என்றார். உண்மையாயிருக்க விரும்புகிறவர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பார். அவர்கள் நற்கிரியைகளை உண்மையாக செய்வார்களானால், அவர்கள் செய்கிற நற்கிரியைகளுடன் கர்த்தர் இருப்பார்.

தேவனுக்கும் இஸ்ரயேல் ஜனங்களுக்கும் இடையில் ஒரு விசேஷ ஏற்பாடு நடைமுறையில் இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அந்த ஏற்பாட்டின்கீழ் கர்த்தருக்கும் அவருடைய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் அவர்கள் உண்மையாக இருப்பதற்கு ஏற்ற விகிதத்தில், கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்தார். எனவே மற்ற தேசங்களில் சிலர் சிலவகையில் சீர்திருத்தத்துக்கு முயற்சித்திருந்தாலும், இந்த திறவுகோல் வார்த்தைகளை கண்மூடித்தனமாக மற்ற தேசங்களுக்கு நாம் பயன்படுத்தக்கூடாது. அந்த சமயத்தில் தேவன் மற்ற தேசங்களுடன் செயல்தொடர்பு கொள்ள பொறுப்பேற்கவில்லை. தங்கள் சொந்த மேற்பார்வையின்கீழ் ஒரு பொதுவான பாடத்தைப்பெற அவர் அவர்களை அனுமதித்தார்.

## தேசங்களுக்கு இன்றையநாளின் ஆதார வசனம் பொருந்தாது

குறிப்பிட்ட ஜனங்களின் தீயபோக்கை மேலும் அனுமதிப்பது எங்கே தீங்கை விளைவிக்கிறதோ, அங்கு மாத்திரம் தேவன் தலையிட்டார். இதற்கு உதாரணமாக, நினிவே பட்டணத்தார், சோதோமியர் மற்றும் அமலேக்கியர்களின் விஷயங்களைக் கூறலாம். இந்த வசனத்தை இன்றைய நாளில் பொருத்தமுடியும் என்று நாம் சொல்லமுடியாது; மேலும் பொதுத்துறை அலுவலகங்களில் உளள சில நல்ல ஜனங்கள் தைரியமாக காரியங்களை நடப்பித்து தவறுகளை எல்லாம் குறைத்து, சரியானவற்றை மேம்படுத்தினால் தேவன் அவர்கள் வேலைகளிலெல்லாம் அவர்களுக்கு வெற்றியைத் தருவார் என்றும் நாம் சொல்லமுடியாது. தேவன் தற்போது எல்லா தேசங்களுடனும் எந்தத் தொடர்பும் கொள்வதில்லை.

இந்த சமயத்தில் தேவனுடைய முழு தொடர்பும் சபையுடன் மட்டுமே இருக்கிறது. இன்று இந்த உலகம் முன்எப்போதும் செய்கிறதைப்போலவே இன்னும் செய்துகொண்டிருக்கிறது. தனக்கென்று என்ன செய்யமுடியும் என்று அது பார்க்கிறது. தைரியமாக காரியங்களை நடப்பிக்கிற இன்றைய இந்த சீர்திருத்தவாதிகள், ஆழமாக வேரூன்றியிருக்கிற அநேக தீயஒழுக்கங்களில் தலையிட முயற்சிசெய்தால், எல்லா நிகழ்வுகளிலும் தங்கள்மீது பெரும் உபத்திரவங்களை வருவித்துக்கொள்வார்கள். இதற்கு தற்காலத்தில் நியூயார்க்கில் நாம் ஒரு உதாரணத்தைப் பெற்றிருக்கிறோம். ஆழமாக வேரூன்றியுள்ள தீமையானது கையாளுவதற்கு

கடினமாக இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களை உயர்ந்தவழியில் கையாளுகிற மனிதர்களை எப்போதாவது இந்த உலகம் உருவாக்குகிறது. சபைக்கு உள்ளேயும் வெளியேயும் உயர்ந்த மனிதர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாருடனும் கர்த்தர் இருக்கிறார் என்று நாம் சொல்லமுடியாது.

இந்த தற்கால அரசாங்கங்கள் தேவனுடைய கிருபையின்கீழ் இருக்கிறது என்று சொல்வது தவறாக இருக்கிறது. இந்தக் காலத்தின் அரசாங்கங்கள் இந்த உலகத்தின் அதிபதியின் செல்வாக்கின்கீழ் இருக்கிறது என்றும், தற்போது அவனுடைய கை மேலோங்கியிருக்கிறது என்றும் வேதம் கூறுகிறது. ஆனால் மேசியா தம் மாபெரும் வல்லமையையும், ஆளுகையையும் எடுக்கும்போது சாத்தான் கட்டப்படுவான். பிறகு தீமையின் ஆதிக்கங்கள் எல்லாம் மேசியாவின் இராஜ்ஜியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படும். அந்த சமயத்திலிருந்து, பரிசுத்தவான்கள் மேசியாவின் ஆயிரவருட அரசாட்சியில் தைரியமாக காரியத்தை நடப்பித்து, தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதற்கான வேலையை கடைசியில் கிறிஸ்து நிறைவேற்றிமுடிக்கும்வரை, பாவத்தை எடுத்துப்போடுவதற்கான நோக்கத்திற்காக அவர்கள் ஆளுகை செய்வார்கள்.

**அடுத்த யுகத்தில் சபை திடமனதுடன் நியாயந்தீர்க்கும்**

அடுத்ததாக, நாம் கவனிக்கும் குறிப்பு, நம்முடைய ஆதாரவசனம் யூதர்களுக்கு பொருந்துவதாக இருக்கிறது என்பதாகும். ஏனெனில் அவர்கள் தேவனுடைய நிழலான ஜனங்களாக இருந்தார்கள், இஸ்ரயேலின் இராஜா, தன்னுடைய நாளில் நியாயாதிபதிகளை நியமித்த குறிப்பிட்ட சிலருக்கு இந்த வார்த்தைகளை பயன்படுத்தினார். இராஜ்யத்தில் சபை நியாயந்தீர்க்கும் வேலைக்காக தற்போது தன்னை தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறது. நாம் காலத்துக்கு முன்னே தீர்ப்பு செய்யக்கூடாது என்று கர்த்தர் நமக்கு தெளிவாக சொல்லியிருக்கிறார். இராஜ்ஜியத்தில் நாம் நியாயந்தீர்ப்போம். அப்போது நியாயந்தீர்த்தலே நம்முடைய வேலையாயிருக்கும். அப்போது கர்த்தருடைய அறிவுரைகளின் முழு இசைவுடன் நாம் நீதியான தைரியமான நியாயத்தீர்ப்பு வழங்குவதற்கு நாம் தேவையாயிருப்போம்.

"பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா ?" என்று அப்.பவுல் கூறுவதை நாம் அறிந்திருக்கிறோம். பரிபூரணத்தின் மகிமையான தரத்திற்கு வரவிரும்புகிற எல்லா மனுக்குலத்தையும் தூக்கிவிட்டு, வெற்றிகரமாகவும், தைரியமாகவும் நாம் இதை செய்யும்படிக்கு, நம்முடைய தற்போதைய அனுபவங்கள், பிற்பாடு உலகத்தை நியாயந்தீர்ப்பதற்கு பொருத்தமானவர்களாக ஆக்குகிறது. அப்போது தீமை செய்கிற யாவரும் அறுப்புண்டுபோவர். அப்போது பிதாவுக்கு மகிமை சேர்க்கும்படிக்கும், குமாரனுக்கு மகிமை சேர்க்கும்படிக்கும் ஒவ்வொரு முழங்கால்களும் முடங்கும், ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும்.

**சபை தற்போது குறிப்பிட்ட நிலைகளின்மீதே தீர்ப்பு செய்கிறது**

தற்போது சபையானது அதன் அங்கத்தினரை குறிப்பிட்ட வகையில் தீர்ப்புசெய்யவேண்டும் என்று வேதாகமம் நமக்கு அறிவுறுத்துகிறது. நாம் ஒருவருக்கொருவர் இருதயங்களை நியாயந் தீர்க்கக்கூடாது. அதற்குமாறாக, நாம் ஒருவர் மற்றவருடைய வாயிலிருந்துவரும் வார்த்தையை அவர்களுடைய இருதய நிலைமையாக எடுத்துக் கொள்ளவேண்டும். ஆனால் நாம் ஒருவர் மற்றவருடைய நடத்தையை நிதானிக்கவேண்டும். ஒருவர் ஒழுக்கமற்று ஜீவிப்பாரானால், அவருடைய நடத்தையின் ஒழுக்கமற்ற தன்மையைக்கொண்டு அவருடன் செயல்தொடர்பு கொள்வது சபையின் கடமையாக இருக்கிறது. சகோதரர்களுடன் வழக்காடுவதில் நீங்கள் அவிசுவாசிகளிடத்தில் செல்வது ஏன் ? அற்ப காரியங்களில் உங்களையே நியாயந்தீர்த்துக்கொள்ள நீங்கள் தயாராக இல்லையென்றால், பெரிய காரியங்களில் நியாயந்தீர்ப்பதற்கு நீங்கள் எப்போதும் ஆயத்தமாக இருப்பது எப்படி ? என்று அப்போஸ்தலர் கேட்கிறார்.

நம்முடைய நியாயத்தீர்ப்பில், கர்த்தர் எந்த வகையில் நம்மை நியாயந்தீர்க்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். கர்த்தர் நல்லது எதுவோ அதனோடு இருப்பார், அதே உண்மையில் நாம் உறுதியாக இருக்கலாம். ஆனால் நாம் இரக்கத்தோடும், பாசத்தோடும் நடந்து கொள்ளவேண்டும். "சகோதரசிநேகத்தில் ஒருவர்மேல் ஒருவர் பட்சமாயிருங்கள்". ஒருவர் மற்றவர்களுடனான செயல்தொடர்புகளில், நாம் கடினமான, வலைந்துகொடுக்காத நியாயத்தீர்ப்பு நிலைகளை எந்தவிகிதத்தில் வைக்கிறோமோ, அதே விகிதத்தில் நாம் நம்முடனான கர்த்தருடைய நியாயத்தீர்ப்பின் அளவீட்டுக்கருவியை பொருத்துகிறோம். "நீங்கள் மற்றவர்களை நியாயந்தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்" மற்றவர்களுக்கு நாம் என்ன சலுகையை பகிர்ந்தளிக்கிறோமோ, அதற்கேற்ப கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார். நாம் மற்றவர்களுடன் கருணையோடு இருக்கவேண்டும். இரக்கமும் மன்னிப்பும் நமக்காக இருக்கிறது என்று நாம் நம்புவதைப் போல, அவை

அனைவருக்கும் தேவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

செயலாற்றுவதற்கான கடமை யாருக்கு இருக்கிறதோ, அவர் பயத்தோடு அல்ல, தைரியத்தோடு செய்யட்டும். அவசியமாயிருக்கிற, மகிழ்ச்சியளிக்காத செயல்களை செய்வதில், நீதியுடனும் அன்புடனும் இரக்கமுள்ள தன்மையில் செயலாற்றுவோமாக. நாம் மனிதனுக்கல்ல, தேவனுக்கே பயந்து, அவரை பிரியப்படுத்துவதிலேயே உள்நோக்கமுடையோராக இருப்போமாக, ஆமென்.

---

**R 5415**

# "இயேசு தாமே அருகில் வந்தார்"
# "JESUS HIMSELF DREW NEAR"

**ஆதார வசனங்கள் : லூக்கா 24:13–35.**

**திறவுகோல் வசனம் :** "கிறிஸ்துவே மரித்தவர், அவரே (மரித்தோரிலிருந்து) எழுந்துமிருக்கிறவர்" – ரோமர் 8:34.

இயேசு அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பின்பு தம்முடைய சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தின மிகவும் ஆச்சரியமான வெளிப்பாடுகளில் ஒன்றை இன்றைய பாடமாக நாம் ஆராயலாம். அவர் உயிர்த்தெழுந்த அன்று அதிகாலையில் தம்முடைய உடலுக்கு சுகந்த வர்க்கமிடும்படி வந்த ஸ்திரீகளிடத்தில் தரிசனமானார். இதை அவர்கள் பரிசுத்த பேதுரு மற்றும் பரிசுத்த யோவானுக்கு, கர்த்தர் நம்மோடுகூட இருக்கிறார் என்று அறிவித்தனர். அதைக்கேட்ட அந்த துடிப்பான இரு அப்போஸ்தலர்களும் துரிதமாக கல்லறையை அடையவேண்டி தங்களுக்குள் போட்டியிட்டனர். ஆனால் அவர்கள் வெறுமையான கல்லறையையே கண்டனர்.

இயேசுவின் சீஷர்கள் திகைத்து குழம்பினர். தான் சிலுவையில் அறையப்படுவேன் என்றும், பின் மூன்றாம் நாளில் உயிரடைவேன் என்றும் அவர்களுக்கு தெரிவித்திருந்தும், அவருடைய போதனையை புரிந்துகொள்ளக்கூடாதிருந்தனர். அவர்களுக்கு முன்னமே சொல்லப்பட்டபடி, அவருடைய உயிர்த்தெழுதலைக் குறித்து அறிந்தபின்புகூட, அவற்றை இணைத்துப் பார்ப்பதில் மிகவும் மந்தமாக இருந்தனர்போல் தோன்றுகிறது.

சாயங்கால வேளையிலே, அந்த இருவரும் தங்கள் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கையில், இயேசுவைக் குறித்து தாங்கள் அடைந்த ஏமாற்றம் குறித்து விவாதித்தனர். எவ்வாறெனில், அவர் மாபெரும் அரசராக வருவதற்கு பதிலாக, சிலுவையில் அறையப்பட்டதுடன், அவரோடுகூட கனத்திலும் மகிமையிலும்இருப்போம் என்கிற அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் தவிடுபொடியாகிவிட்டது. அவர்களுடைய மதத்தலைவர்களின் மனதிருப்திக்காக இயேசு மோசடிக்காரரென நிரூபிக்கப்பட்டிருந்தார். அவர் அறிவித்தபடியும், மற்றும் அவர்கள் நம்பிக்கொண்டிருந்தபடியும் இல்லாமல், அவர் சிலுவையில் அறையப்பட்டதினிமித்தம் மேசியாவாக அவர் இருக்கமுடியாது என்பது உண்மையாக வெளித்தோற்றத்தில் காணப்பட்டது.

**இயேசு இன்னும் மாம்சத்திலிருக்கிறார் என்பது அநுமானிக்க முடியாதது**

அவர்கள் இவ்விதமாக பேசிக்கொண்டே நடக்கையில் இயேசு அவர்களை முந்திச்சென்றார். அவர் உயிர்த்தெழுதலின் மாறுதல் அடைந்தபடியால் அவர்கள் அவரை அறியவில்லை. "அவர் மாம்சத்தில் கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று அப்.பேதுரு நமக்கு கூறுகிறார். சபையின் உயிர்த்தெழுதலின் மாறுதலில் தரப்பட்ட விளக்கங்கள் மூலமாக இதன் வெளிச்சத்தை நாம் புரிந்துகொள்கிறோம். அப்.பவுல் கூறும்போது, "பலவீனமானதாக விதைக்கப்படும், பலமுள்ளதாக எழுந்திருக்கும். கனவீனமானதாக விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும் ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" – 1கொரிந்15:42–44. உண்மையிலேயே சபையானது தனது ஆண்டருக்கொப்பான உயிர்த்தெழுதலின் மாறுதலை அடையுமானால், அவரும் அப்படிப்பட்ட மாறுதலைப் பெற்றிருக்கவேண்டும்.

இதே கருத்தானது அப்.பவுலின் வார்த்தையில் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது."ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்–படுவோம்". ஏனெனில் "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது". இயேசு இனி ஒருபோதும் மனிதனாக அல்லாமல் மரித்தோரிலிருந்து எழுந்து உயிர்ப்பிக்கிற ஆவியாக பெற்ற அதே அனுபவத்தை, தேவனுடைய இராஜ்யத்திற்கு தகுதியடையும்பொருட்டு சபையும் பெறவேண்டும்.

"தேவனுடைய வார்த்தை" எனப்பட்ட லோகோஸ் என்னும் இயற்பெயர் இன்னும் அவருடையதாகவே இருக்கிறதுபோல, நமது கர்த்தருக்கு "மனுஷகுமாரன்" என்ற பெயரானது இன்னும் அவருக்கே பொருந்தக்கூடியதாக இருக்கிறது. அந்த வார்த்தையானது மாம்சமாகும்போதும், அவருடைய அடையாளம் இழக்கப்படவில்லை. நமது கர்த்தரின் மனிதஅனுபவங்களைக் குறித்து ; "மரணத்தை ருசிபார்ப்பதற்காகவே எனக்கு ஒரு சரீரத்தை ஏற்படுத்தினீர் என எபிரேயர்10:5–10இல் வாசிக்கிறோம். அவர் அந்த

நோக்கத்தை நிறைவேற்றினபோது இனிமேலும் மனித சுபாவத்தில் இருக்கவேண்டிய அவசியமில்லை. மாறாக தம்முடைய சீஷர்களுக்கு அவர் முன்னுரைத்ததுபோல, தாம் முன்பிருந்த ஆவிக்குரிய நிலைமைக்கு, அதாவது ஆவிக்குரிய சுபாவத்திற்கு, அதேசமயம், பரலோகத்திற்கே ஏறிச்சென்றார்.

இயேசுவானவர் பரலோகத்தில் நித்தியத்திற்கும் காயங்களையும் தழும்புகளையும் உடையவராகவும், மேலும் மனித சுபாவத்திற்கும் மேலான ஆவிக்குரிய ஜீவிகள் மத்தியில் மாம்சத்தில் இருக்கிறார் என நாம் கருதுவோமேயானால், உலகத்தோற்றத்துக்கு முன்பாக பிதாவானவரோடு கொண்டிருந்த மகிமைக்கு, தேவன் அவரை ஒருபோதும் உயர்த்தவில்லை என்று கருதுவதாகும். மேலும் அது அநுமானிக்கமுடியாத ஒன்றாக உள்ளது. வேத வசனங்கள் காண்பிக்கிறபடி, பிதாவானவர் அம்மீட்பரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தியிருக்கிறார் என்பதை மனதில் கொள்ளவேண்டும். மனித சுபாவத்திற்கும் மேலான ஆவிக்குரிய ஜீவியாக மட்டுமல்ல, ''எல்லா துரைத்தனங்களுக்கும், கர்த்தத்துவங்களுக்கும், வல்லமைகளுக்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் '' – பிலிப் 2:9–11; எபேசி 1:20–23.

**இயேசுவானவர் தம்மைக் காண்பித்தார்( Jesus showed himself)**

இயேசுவானவர் தம் உயித்தெழுதலுக்குப் பின் தம்மை உயிரோடிருப்பவராக காண்பித்தார் என்று பரிசுத்த லூக்கா கூறுகின்றார் –அப்1:3. மேலும் அவர், ''தோன்றினார்'' எனவும் அவரைப்பற்றி பேசுகிறார். இந்த இரு வார்த்தைகளும் உண்மை நிகழ்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. அவர் தோன்றினார் பின்பு மறைந்துபோனார். அந்த மூன்று நாட்களுக்குப்பின்பு, தமக்குள்ளாக ஏற்பட்டிருக்கிற மாபெரும் மாறுதலை எல்லா வகையிலும், அநேகருக்கல்ல, சிலருக்கே வெளிப்படுத்தினார். வேறுபட்ட வகைகளில் தோன்றி தம்மைக் காண்பித்தது மட்டுமல்ல, ஒன்றுக்கொன்று வித்தியாசமான உடல் அமைப்புகளிலும், வேறுபட்ட உடைகளிலும் காண்பித்தார். பின் அவர் சடுதியில் மறையும்போது அவருடைய உடையும் மறைந்துவிட்டது.

இயேசுவானவர் ஆவிக்குரிய ஜீவியாக, அதே சமயம் சரீரத்தில் உருவெடுத்தார் என நாம் சொல்வோமேயானால், மரித்தவர்களை உடலுள்ளவர்களாக காண்பிக்கிற வகுப்பார்மேல்(spiritualists) அநுதாபம் கொள்ளவேண்டும் என புரிந்துகொள்ளக்கூடாது. நாம் ஒரு உதாரணத்தை அறிய விரும்புவோமேயானால் இயேசுவானவர் ஆவிக்குரிய நிலையிலிருந்து மனிதனாக மாறுவதற்கு முன்பாக, லோகோஸாக இரண்டு தேவதூதரோடு, ஆபிரகாமுக்கு தரிசனமானதைக்குறித்து வேதாகமம் கூறும் விபரத்திற்கு செல்வோம். நாம் வாசிக்கும்போது, கர்த்தரும் அந்த இரு தேவதூதரும் ஆபிரகாமோடு புசித்து, அவருடன் உரையாடிக் கொண்டிருந்தனர்.ஆனால் ஆபிரகாமோ, அவர்கள் தங்களை தூதரென்று வெளிப்படுத்தும்வரை அவர்களை அறியாமல், அவர்களை உபசரித்தார். ''சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு''.

இதே விதமாகத்தான் எம்மாவு ஊருக்குச் சென்ற இரு சீஷர்களும் இருந்தனர். புதியவராக வந்தஆண்டவர் அவர்களுக்கு முன்சென்று, ''நீங்கள் ஏன் துக்கமாக சோகத்தோடு பேசிக்கொண்டிருக்கிறீர்கள்'' என இரக்கத்தோடு அவர்களை வினவினார். நடந்த சம்பவங்களை அவர் அறியாதவராக இருப்பதை அவர்கள் கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டு, தங்களுடைய இருதயங்களை அவருக்குத் திறந்தனர். நாசரேத்தூரானாகிய இயேசுவானவர் தேவனுக்கும் எல்லா மனுஷருக்கும் முன்பாக வல்லமையுள்ள தீர்க்கதரிசியாக இருந்தார் என பேசினர். மேலும் பிரதான ஆசாரியரும், மதத்தலைவர்களும் அவரை எவ்வாறு சிலுயையிலறைய ஒப்புக்கொடுத்தனர் எனவும் விளக்கினர். மேலும் அவர்கள் இரட்டிப்பான ஏமாற்றமடைந்ததுடன், தாங்கள் ஒரு நண்பரை இழந்துவிட்டது மாத்திரமல்ல, இஸ்ரயேலை மீட்டு இரட்சிக்கும் மேசியாதான் அவர் என்ற அவர்களது நம்பிக்கை தகர்க்கப்பட்டுவிட்டது எனவும் விளக்கினர். மேலும் அவர்கள் அன்று காலையில் நடந்த சம்பவங்களையும் எடுத்துரைத்தனர். சில ஸ்திரீகளின் கூட்டம் அவர் வைக்கப்பட்டிருந்த கல்லறைக்கு சென்றபோது அது காலியாக இருந்ததாகவும், அவர்கள் தூதர்களையும் கண்டதாகவும், அத்தூதர்கள் அவர் உயிரோடிருக்கிறார் என கூறியதாகவும் போன்ற விஷயங்களை அவருக்குத் தெரிவித்தனர்.

இதுவே இயேசு எதிர்பார்த்திருந்த வாய்ப்பாக அமைந்தது. அவர்கள்பெற்ற அனுபவங்கள் தெய்வீகத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருந்ததென கிளர்ச்சியோடு கூறாமல், அமைதியான முறையில் தம் சீஷர்களுக்கு எடுத்துரைக்கும் வாய்ப்பாகவும் அத்தருணம் அமைந்தது. அப்போது அவர் அவர்களை நோக்கி, ''தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்கு புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே'' என்றார். தாம் இவ்விதமாக பாடுபடவும் தமது மகிமையில் பிரவேசிக்கவேண்டியதும் அவசியம் என எடுத்துரைத்தார். அதாவது, அப்படிப்பட்ட பாடுகளின்றி, மனுக்குலத்தை படிப்படியாக ஆசீர்வதித்து சீர்பொருந்தச் செய்யும் மகிமையின் இராஜாவாக ஒருபோதும் ஆகமுடியாது எனக்கூறினார் – அப்3:19–21.

பின்பு, மேசியாவின் அனுபவங்கள் தொடர்பாக, மோசே முதலிய எல்லா தீர்க்கதரிசிகள் மூலம் தேவன்

முன்னுரைத்ததை அவர்களுக்கு சுட்டிக்காட்ட ஆரம்பித்தார். மேலும் ஈசாக்கு ஆபிரகாமினால் எவ்வாறு பலியாக தரப்பட்டார் என்பதை உண்மையாகவே அவர்களுக்கு நினைப்பூட்டியிருப்பார். ஆபிரகாம் பிதாவாகிய தேவனுக்கு நிழலாகவும், ஈசாக்கு தன்னையே குறிக்கும் நிழலாகவும் உள்ளதை விளக்கியிருப்பார். மேலும் அப்பலியானது, முழுமையாக செலுத்தப்பட–வில்லையாயினும், தம்முடைய மரணத்தைக் குறிக்கும் வகையில் அது முழுமையாக செலுத்தப்பட்டதாகவே கருதப்படுகிறது. அதன்பின், ஈசாக்கினுடைய வாழ்க்கையானது, இயேசுவின் உயிர்த்தெழுதலின் வாழ்க்கையை குறிப்பதோடு, பிதாவினிடத்தில் மீண்டும் இருக்கப்போவதைக் குறிக்கிறதாயிருக்கிறது.

அடிக்கப்பட்ட கன்மலையிலிருந்து புரண்டோடிவந்த நீரைப்பற்றி சந்தேகத்திற்கிடமின்றி அவருக்கு கூறியிருப்பார். அக்கன்மலையானது தம்மையே குறிப்பதாகவும், மரித்துக்கொண்டிருக்கிற உலகத்தின் ஜனங்களுக்கு மீண்டும் ஜீவத்தண்ணீரை தரும்பொருட்டு, தாம் அடிக்கப்படவேண்டும் என்பதையும் கூறியிருப்பார். மேலும் மோசே வனாந்தரத்தில் உயர்த்திக்காட்டிய சர்ப்பமானது பாவத்தை குறிப்பதாக உள்ளதுடன், சிலுவையிலறையும் பொருட்டு பாவியின் இடத்திற்கு அவரே சென்றார். பாவியும்கூட மீட்பரின் பலியின்மேல் வைக்கும் விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படுகிறார் என்றும் விளக்கினார்.

பாவ நிவாரணநாளின்போது நடந்த பலியைப்பற்றியும் சந்தேகத்திற்கிடமின்றி விளக்கியிருப்பார். அந்நாளில் அடிக்கப்பட்ட காளையானது, மாம்சத்தில் இருக்கும் தம்மையே(இயேசுவையே) குறிக்கும். மேலும் அந்நாளில் இருந்த பிரதான ஆசாரியன் மகா பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசித்து, ஜனங்களின் பாவ மன்னிப்புக்காக இரத்தத்தை தெளித்ததும்கூட உயிர்த்தெழுந்தபின்பு ஆவிக்குரிய ஜீவியாக உள்ள தம்மையே குறிப்பதுடன், உலகத்தின் முழு பாவநிவர்த்தியின் பொருட்டு, பரலோகத்திற்கே சென்றதைக் குறிக்கிறது. மேலும் யாருக்காக மரித்தாரோ அவர்களை ஆசீர்வதிக்கவே தம்முடைய இரண்டாம் வருகையில் வருவதாக கூறியிருப்பார்.

**அவர் வேத புஸ்தகத்தைத் திறந்தார் (He opened the Scriptures)**

இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவஆட்டுக்குட்டியாக நிழலான பஸ்கா ஆடு உள்ளது என்றும், அது தம்மையே குறிக்கும் என்றும் சந்தேகத்திற்கிடமின்றி விளக்கினார். கிறிஸ்து பாடுபடவும் பின்பு மகிமையடையவும் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனங்களுள்ள சங்கீதம், ஏசாயா மற்றும் இதர தீர்க்கதரிசிகளின் வேதப் பகுதிகளையும் அவர்கட்கு விளக்கியிருப்பார் என நாம் யூகிக்கலாம். அவர்கட்கு அந்த வேதப்பகுதிகளை விளக்கியபோது, அந்த சீஷர்கள் தங்களுடைய இருதயம் கொழுந்துவிட்டு எரிவதாக கூறியது ஆச்சரியமல்லவே!

ஆதிகால சபையில் சீஷர்கள் தேவனுடைய கிருபை பொருந்திய செய்திகளினாலும், அவருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறுதலினாலும் புத்துணர்வு பெற்றிருப்பார்களானால் இயேசுவின் சீஷர்களும் அதேவிதமாக புத்துணர்வை நிச்சயம் அடைவார்கள். ''என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்'' என கர்த்தர் தீர்க்கதரிசனமாக உரைத்தார். தேவனுடைய வார்த்தைகளை புரிந்து உட்கிரகித்தாலொழிய வளர்ச்சி குன்றிய கிறிஸ்தவ வாழ்க்கையும் அனுபவமுமே இருக்கும். எனவே தேவனுடைய ஜனங்கள் கிருபையிலும் அறிவிலும் வளரவும், வேத வாக்கியங்களை ஆராயவும் வேண்டும் என்று இயேசுவும் அப்போஸ்தலர்களும் அநேகமுறை புத்திமதி கூறியதை நாம் பெற்றிருக்கிறோம். குளிரானவர்களும், அலட்சியமானவர்களும் மனத்தளர்ச்சியுற்றோர் மற்றும்நிராசை அடைந்தவர்களோடு இணைந்து, ''ஏற்றகால போஜனத்திற்காக'' குருவிடம் வரலாம். அவ்வண்ணமாக வருபவர்கள் வெறுமையாக அவரால் திருப்பி அனுப்பப்பட மாட்டார்கள். ஏனெனில்அவர் கூறினதுபோல, ''தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள் அப்போது உங்களுக்கு திறக்கப்படும்''. கடந்தகாலங்களில் தேவ வாக்குத்தத்தங்கள் நிறைவேறினதை அவர்கள் உணர்ந்தபோது அவர்கள் இருதயம் எந்தளவு கொழுந்துவிட்டு எரிந்ததோ, அதே அளவுக்கு எதிர்காலத்தில் நிறைவேறப்போகும் வாக்குத்தத்தங்கள்மேல் அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை வளரச் செய்யவேண்டும்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினதைவிட, வேறுவகையில் வெளிப்படுத்தியிருக்கமுடியும். தோட்டக்காரனைப்போல, ஒரு வழிப்போக்கனைப்போல மற்றும் வெவ்வேறு வகைகளில் தம்மை வெளிப்படுத்தி, பின் அவர்களோடு உரையாடியபின் திடீரென மறைந்துவிட்டதற்கு பதிலாக, தான் கடைசியாக தர்சு பட்டணத்தாராகிய சவுலுக்கு தரிசனமானதுபோல செய்திருக்கலாம். நாம் வாசிக்கிறதுபோல ''எல்லாருக்கும், பின்பு அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்''(1கொரிந்15:8). ஆவியினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் இப்போது உயிர்த்தெழுதலில் ஆவியில் பிறக்கவேண்டும். பிற்பாடு அவர்கள் மீட்பரைப்போலவே ஆவியின் ஜீவிகளாக அவர்இருக்கின்ற வண்ணமாக அவரை தரிசித்து அவருடைய மகிமையில் பங்கடைவார்கள். அவருடைய பின்னடியார்கள் அவர்

இருக்கிற வண்ணமாகவே அவரை தரிசிக்க அதுவே ஏற்ற சமயமாக இருக்கும். மாறாக முன்பிருந்த மனித சுபாவத்தில் அவரை தரிசிப்பதில்லை – 1யோவா3:2.

ஆனால் தர்சு பட்டணத்தாராகிய சவுல், அவரை ஒரு ஆவிக்குரிய ஜீவியாகவே கண்டார். நடுப்பகலிலே பிரகாசிக்கிற சூரியப்பிரகாசத்தைவிட அதிகமான பிரகாசத்தோடு அவரைக் கண்டார். ஆனாலும் அவரை தரிசிக்கவேண்டிய ஏற்ற சமயத்திற்கு முன்பதாகவே கண்டார். அவ்வொளியின் பிரகாசம் அவருடைய கண்களைப் பாதிப்படையச்செய்தது. மேலும் அவருடைய பார்வை அற்புதமான வகையில் மீண்டும் கிடைக்கப்பெற வேண்டியிருந்தது. அவ்வாறு குணப்படுத்தப்பட்டாலும் சிறு குறையானது அவர் மரிக்கும்வரை அவரது மாம்சத்தில் ஒரு முள்ளாக இருக்கும்படி அனுமதிக்கப்பட்டது. அது தேவனுடைய மாபெரும் கிருபையை நினைவுபடுத்தவும், அவருடைய வல்லமையுள்ள ஊழியத்தில் அவரை தாழ்மையுள்ளவராக இருக்கும்படியும் அனுமதிக்கப்பட்டது – 2கொரிந்12:7.

## அவரை அவர்கள் அறிந்தபோது அவர் மறைந்தார் (They knew him - He vanished)

எம்மாவு ஊருக்கு அவர்கள் வந்தடைந்தபோது, அவர்களுடைய வற்புறுத்தலின்பேரில் இயேசு அவர்களுடைய உபசரிப்பை ஏற்றுக்கொண்டார். ஒருவேளை அவர்கள் அவரை வற்புறுத்தாமலிருந்திருந்தால், அவர் தம்வழியே சென்றிருப்பார் என அநுமானிக்க நமக்கு எல்லா வகையிலும் காரணமுண்டு. பதிலாக, அவர் தொலைவில் செல்பவர்போல் தம்மை காண்பித்தார். அவ்வாறே இன்றைக்கும் தம் சீஷர்களிடத்தில், அவர்களது விருப்பமின்றி தலையிடுவதில்லை. மாறாக, அவர் நமக்குத் தேவை என்று நாம் உணர்ந்திருந்து, அவரிடத்தில் கேட்கவும், நம் சந்தோஷம் நிறைவாகும்படி பெற்றக்கொள்ளவும் நம்மை உற்சாகப்படுத்துகிறார். இதுவே எம்மாவு ஊருக்கு சென்ற சகோதரருடைய நிலைப்பாடாக இருந்தது. அவர்கள் எதை கற்றுக்கொண்டனரோ அதை போற்றுகிறவர்களாக இருந்தனர். “இந்த மனிதரைப்போல ஒருவரும் பேசினதில்லை”. ஒருவேளை அவர் அவர்களுக்கு இன்னும் ஊழியம் செய்திருந்தால், அவர்களுடைய சக்திக்குட்பட்டு மிகுந்த மகிழ்ச்சியோடு அவருக்கு மரியாதை செய்திருப்பர். மேலும் இது அவர்களிடையே தொடர்ந்து உரையாடுவதற்கான வாய்ப்பாக இருந்திருக்கும்.

அவ்வாறாகவே நடந்தது. அவர்கள் இரவு உணவு அருந்த அமர்ந்தபோது, அவர்களுடைய விருந்தாளி, இயேசுவைப்போலவே இருப்பதாக கருதினர், மேலும் அவர் அப்பத்தை எடுத்து அதை ஆசீர்வதித்த விதம் நிச்சயமாகவே இயேசுவானவரையே அவர்களுக்கு நினைப்பூட்டியது. அவர்களுடைய மனக்கண்கள் இப்போது திறக்க தொடங்கின. அது வேறுயாருமல்ல, வழிப்பிரயாணத்தில் ரசித்துக்கேட்ட பாடங்களை தந்தது, அவர்களுடைய சொந்த குருவே என உணர்ந்தனர். அவ்வகையில் அவர் மனிதனாக தோன்றியதன் நோக்கம் இப்படியாக நிறைவேறியவுடன், அவர் இமைப்பொழுதிலே அவர்கள் கண்களிலிருந்து மறைந்தார், அவருடைய உடைகள் மற்றும் அனைத்தும் மறைந்தன.

உறக்கம் வராத அளவுக்கு அவர்களுடைய மகிழ்ச்சியானது இருந்தது. அவர்கள் இந்த நற்செய்திகளை அவசரமாக மற்ற சீஷர்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டியிருந்தது. ஆகவே அவர்கள் எருசலேமுக்குத் திரும்பி பிரயாணப்பட்டனர். அங்கே சீமோன் பேதுருவுக்கு கர்த்தர் தம்மை வெளிப்படுத்தியதால் மிகுந்த மகிழ்ச்சியடைந்த மற்றவர்களை கண்டனர். அவ்விருவரும் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துரைத்தனர். அவர்களுடைய இருதயங்களில் விசுவாசம், நம்பிக்கை, சந்தோஷம் வளரத்துவங்கின.

கர்த்தர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப்பின்பு தம்மை வெளிப்படுத்தின விதம் எல்லா வகையிலும் சிறந்ததாகவே இருந்ததை யார்தான் காணாமலிருக்கக்கூடும் ?அவர்களில் அநேகருக்கு அல்லது அனைவருக்கும் தர்சு பட்டணத்தாராகிய சவுலுக்கு பின்பு தோற்றமளித்ததுபோல் தோன்றியிருப்பாரானால், அவர்கள் பெரும் அதிர்ச்சியடைந்து மிரண்டுபோயிருப்பர். நடுப்பகலின் சூரியப்பிரகாசத்தைப் போன்ற ஒளியோடு சேர்ந்து தங்கள் குருவாகிய இயேசுவை அடையாளங்காணமுடியாதவர்களாகி இருப்பர். அல்லது வானத்திலிருந்து ஒரு சத்தத்தின் மூலம் தன்னுடைய உயிர்த்தெழுதலை அறிவித்திருந்தால், தீர்க்கதரிசன வார்த்தைகளை அவர்களுடைய மனதில் விளக்கியிருக்கும் வாய்ப்பை இயேசு பெற்றிருக்கமுடியாது. மேலும் அவர்கள் கலக்கமடைந்து உணர்ச்சிவசப்பட்டு, அவருடைய அறிவுரைகளை அவர்கள் நன்முறையில் பெற்றிருக்கமுடியாது.

அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் பரமேறினதற்கும் இடைவெளியில் இருந்த நாற்பது நாட்களில், பத்துமுறைக்கும் குறைவாகவே தோற்றமளித்தார் என நினைவில் கொள்ளவேண்டும். அவற்றில் இருமுறை மாத்திரமே ஒருவிதத்தில் அவர்கள் காணும் வண்ணமாக, அதாவது சிலுவையில் அறையப்பட்ட காயங்களோடு தோன்றினார். அந்த இரு சம்பவங்களிலும் கதவுகள் பூட்டியிருந்த வீட்டிற்குள் தோன்றி காட்சியளித்தபின், இன்னும் கதவுகள் பூட்டப்பட்டிருந்தபோதே காணப்படாமல் மறைந்தார். அவருடைய பின்னடியார்கள் இருவித பாடங்களை கற்றுக்கொள்ளவேண்டியே அவர் அவ்வாறு செய்தார்.

1. அவர் இனி ஒருபோதும் மரித்தவரல்ல, மாறாக உயிரோடு உயிர்த்தெழுந்துவிட்டார்

2. அவர் இனி ஒருபோதும் மாம்சத்திலில்லை மாறாக ஆவியின் சரீரத்திலிருக்கிறார்.

''இப்போது கர்த்தரே அந்த ஆவி''

---

**R 5417**

# ''என்னுடையதென்று சொல்லிக்கொள்ள எதுவுமில்லை''

# "NAUGHT THAT I HAVE MY OWN I CALL"

''கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் – யோபு 1:21.

நாம் பெற்றிருக்கிற அனைத்தும் மிகுதியாக இருப்பினும் அல்லது குறைவாக இருப்பினும், அது தேவனிடத்திலிருந்து வரும் கொடையே என கருதப்படவேண்டும். நம் ஆதி பெற்றோருக்கு மிகுந்த உதாரகுணமுடன் தேவன் அளித்த கொடை பரிபூரணமான ஜீவன் ஆகும். அவர்கள் தேவதூதரிலும் சற்று சிறியவராக, ஆனால் மாம்சத்தில் தேவனுடைய சாயலாகவும் ரூபத்தின்படியேயும் உண்டாக்கப்பட்டனர். கீழ்ப்படியாமையினால் இந்த பரிபூரணத்தன்மையை இழந்தனர். ஏதேன் தோட்டத்தில் தொடர்ந்து இருக்க அனுமதிக்கப்படவேண்டுமானால் கீழ்ப்படிதலே நிபந்தனையாக இருந்தது. அவர் கீழ்ப்படிதலோடு இருந்தாரானால், அத்தோட்டத்தில் அந்த பரிபூரணத்தன்மையை அனுபவித்தும் பிழைத்தும் இருக்கலாம், மேலும் தம்முடைய சந்ததியின்மூலம் பூமியை நிரப்பவும், தான் பெற்றிருந்த அதே ஆசீர்வாதமான நிலைமைகளுக்குள் முழு உலகத்தையும் படிப்படியாக கொண்டுவரவும் செய்திருக்கலாம்.

ஆதாம் பாவம் செய்தபோது, அவர் தம்முடைய குமாரனாக இராதபடி தேவனால் நிராகரிக்கப்பட்டார். அதன்பிறகு இயேசு வரும்வரை, எந்த ஒரு மனிதனும் தேவனுடைய குமாரன் என அழைக்கப்படவில்லை. இயேசுவானவர் தேவகுமாரன் என அழைக்கப்பட்டதிலிருந்து, அவர் மூலமாய் தேவனிடத்தில் சேர்ந்து, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களைத் தவிர, வேறெவரும் தேவகுமாரர் என அழைக்கப்படுவதில்லை. பாவத்தின் சம்பளம் மரணம் என்கிற தண்டனையை ஆதாமின்மேல் கொண்டுவரும் ஒரே நோக்கத்திற்காக, அவருடைய வீடாகிய ஏதேனில் இருந்து வெளியேற்றப்பட்டார். கர்த்தருடைய தூதனானவர் ஆதாமை வெளியே துரத்தினார். இதைக்குறித்து தேவனுடைய கருத்து என்னவெனில், ''அக் கனியை புசிக்கும் நாளில் சாகவே சாவாய்''(ஆதி2:17) என்பதாகும். இம்மரணம் ஒரு நீண்ட செயல்முறையாக ஆரம்பித்து 930 வருடங்கள் கழித்து முடிவடைந்ததாக இருந்தது.

பாவத்தின் சம்பளமாகிய மரணதண்டனை வந்த பின்பும்கூட, நம் ஆதிப்பெற்றோர் அவர்களுடைய கீழ்ப்படியாமைக்குப் பின்பும்கூட, வாழ அனுமதிக்கப்பட்டதும் தேவனுடைய கிருபையே ஆகும். ஆதாமையும் ஏவாளையும் ஏதேனைவிட்டு துரத்தியதன்மூலம், சாபமானது நம் மனுக்குலத்தின்மேல் சுமத்தப்பட்டிருந்தாலும், அச்சாபத்தோடு ஆசீர்வாதமும் இணைந்திருந்தது. தேவன் அவர்களை தோட்டத்திலிருந்து வெளியேற்றினபோது, ''உன் நிமித்தம் பூமியானது சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடு அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்; வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய். நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்கு திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்'' என்றார் – ஆதி 3:17–19. இதுவே அந்த சாபமாகும். அவர்கள் கொஞ்சகொஞ்சமாக சாகவேண்டும்.

**நம் அனைத்து ஆசீர்வாதங்களும் தேவ தயவே**

ஆதாமும் ஏவாளும் தங்களுடைய ஜீவியக் காலத்தை அதிகரிக்கச்செய்ய, தங்களுடைய வல்லமையைக்கொண்டு கூடுமானவரை எல்லாவற்றையும் செய்திருந்தாலும், கர்த்தருடைய ஒரு நாள் என்கிறதான முழு 1000 வருடங்களை அவர்களால் வாழ முடியவில்லை. ஆதாம் ஏறக்குறைய ஒரு முழு நாள்(1000 வருடம்) வாழ்ந்திருந்தாலும், அவர் கொஞ்சகொஞ்சமாக கல்லறையை நோக்கி இறங்கிக்கொண்டிருந்தார். உடலளவிலும், மனத்தளவிலும், ஒழுக்க ரீதியாகவும் அவர் பெற்றிருந்த சக்தியானது தேய்ந்து கொண்டிருந்தது. அவ்வாறே அவருடைய முழு சந்ததியுமே பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியாக ஆகிவிட்டது.

இது அநீதியான அல்லது நியாயமற்ற தீர்ப்போ அல்ல. நாம் உயிரோடிருப்பதற்கான தேவனுடைய தயவாயிருக்கிறது. சில வருடங்களாவது நாம் உயிரோடு வாழும் உரிமையானது ஒரு மாபெரும் வரமாகும். ''நிர்வாணமாகவே இவ்வுலகிற்கு வந்தேன்'' என தீர்க்கதரிசியாகிய யோபு தம் அனுபவத்தை விளக்குவதுபோல், அனைவருடைய விஷயத்திலும் இது உண்மையானதே. தேவ வழிநடத்துதலின்படியே நாம் பெற்றிருக்கிற சிலாக்கியங்களை அனுபவிக்கிறோம்.

தேவனுடைய அனுமதி மற்றும் தயவின்படியே, மந்தைகளையும் பிள்ளைகளையும் பெற்றிருந்தார் என்பது யோபுவின் விஷயத்தில் உண்மையாகும். பின்பு வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவருடைய ஆடுகளையும், வேலைக்காரரையும் பட்சித்துப்போட்டது. அவருடைய எதிரிகள் அவருடைய ஒட்டகங்களையும், எருதுகளையும், கழுதைகளையும், மற்ற சில வேலைக்காரரையும் கொன்று போட்டனர். புசல்காற்று வந்து அவருடைய பிள்ளைகளை கொன்றுபோட்டது. ஆனால் யோபு, ''கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்துக்கே ஸ்தோத்திரம்'' என்றார். நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையை அவர் உடையவராயிருந்தும் யோபு

அதை தமக்காக கேட்கவில்லை. தாம் பெற்றிருந்த அனைத்தும் தேவனுடையதே தவிர தன்னுடையதல்ல என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

இயேசுவானவர் வரும்வரை ஜீவன் மற்றும் அழியாமை பற்றிய வெளிச்சம் தரப்படவில்லை(2தீமோ1:10). இரட்சிப்பைப் பற்றியதான மாபெரும் செய்தியானது முற்காலங்களில் கோடிட்டுக் காட்டப்பட்டதாக மட்டுமே இருந்தது, ஏற்ற சமயத்தில் இயேசுவினால் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. ஆதாம் இழந்துபோன ஜீவனுக்கு நிகரான தம்முடைய ஜீவனை, மீட்கும்பொருளாக தரும்பொருட்டு அவர் வந்தார். ஒரு மனிதனால் மரணம் உண்டானதுபோல, ஒரு மனிதனால் மரித்தோருடைய உயிர்த்தெழுதலும் உண்டாகவேண்டும் என்ற இந்த முழு ஏற்பாட்டின் அழகை இதில் நாம் காண்கிறோம். ரோமர் 5:19ன்படி, "ஒருவருடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளானதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்". அவர்கள் அனைவரும் மரணத்தீர்ப்பிலிருந்து விடுதலையாக்கப்பட்டு, பின் உயிர்த்தெழுதலை அடைவார்கள்.

கிறிஸ்துவுக்குள்ளான இந்த ஏற்பாட்டின்படி முதன்முதலில் அதின் பலனை அடைபவர்கள் சபை வகுப்பாரே ஆவர். நாம் புதிதான ஜீவனுடையவர்களாக நடந்துகொள்ளும்படி அவரோடுகூட எழுப்பப்பட்டிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். தேவன் தாம் வாக்குத்தத்தம் செய்திருக்கிறபடி உயிர்த்தெழுதலை முழுமையாக நிறைவேற்றுவார் என்பதில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். நாம் மரிக்கக்கூடாது என நாம் உரிமை கோரமுடியாது. அவ்வாறு கோருவது வேத வசனங்களுக்கும் எல்லா உண்மைகளுக்கும் முரண்பாடானது ஆகும். அதற்கு மாறாக, நாம் மரிப்போம் என்பதை ஏற்றுக்கொள்வோம். ஆனாலும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர், அவர் மூலமாய் நம்மையும் எழுப்புவார் என நம்புகிறோம். யாரெல்லாம் தற்காலத்தில் தம்மிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக உள்ளார்களோ, அவர்கள் தேவனோடு ஒப்புரவாகும்படி, இயேசு முழு உலகத்தின் பாவத்திற்காக, ஒரு பாவநிவாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அதன்பின்பு, உலக மனுக்குலமும் கிறிஸ்துவின் ஒப்புரவாகுதலின் ஊழியத்தின் பலனை படிப்படியாக பெற்றுக்கொண்டு, தேவனோடு சீர்பொருந்தும் வாய்ப்பையும் பெறுவர்.

**வாழும் உரிமையை இழந்த மனுக்குலம்**

சபையினுடைய நம்பிக்கையானது, அவள் கிறிஸ்துவோடுகூட 1000 வருடங்கள் ஆளுகைசெய்து, சாத்தானைக்கட்டி, பின் பாவம், வேதனை மற்றும் மரணத்திலிருந்து மனுக்குலத்தை உயர்த்தி, வேத வசனங்கள் கூறுவதுபோல், "எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைப்பார்"(ஏசாயா25:8). இதுவே தேவனுடைய செயலாக, முழு காரியத்தையும் திட்டமிட்டு வடிவமைத்திருக்கிறார். பிதாவினுடைய பிரதிநிதியாக இருந்து, மனுக்குலத்தை கிரயத்துக்குக் கொண்டதினால் இது கிறிஸ்துவின் வேலையாகவும் ஆகிறது. இவரே "தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியுமாயிருக்கிறவர்". "எல்லாவற்றிலும் அவரே முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" – வெளி3:14; கொலோ1:18.

எல்லா ஆசீர்வாதங்களும் நம்முடையதாயிராமல்,தேவனுடையதாயிருக்கிறதை யோபு கண்டதைவிட, நாம் இன்னும் தெளிவாகக் காண்கிறோம். நாம் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதினாலேயே இன்னும் அதிக தெளிவாக காண்கிறோம். எதைக்குறித்தும் நாம் உரிமைகொண்டாட முடியாதவர்களாக உள்ளோம் என நாம் அறிந்திருக்கிறோம். நாம் செய்யவேண்டியதெல்லாம் தேவகிருபையையே சார்ந்திருப்பதாகும். ஆனாலும் எல்லாரும் இந்த கிருபையின் செய்தியை இன்னும் கேட்க முடிவதில்லை. "இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய பிசாசானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" – 2கொரிந் 4:4.

எனவே, குறிப்பாக, அபிஷேகம் பண்ணப்பட்டவர்களுடைய கண்கள் மட்டுமே காணமுடியும். இயேசு தம்முடைய நாட்களில் கூறும்போது, "உங்கள் கண்கள் காண்கிறதினாலும், உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்" என்கிறார் – மத்13:16. கர்த்தராகியஇயேசுவை சிலுவையிலறைந்தவர்களின் குருட்டுத்தனத்தைப் பற்றிய இதே கருத்தை அப்.பேதுரு உறுதிப்படுத்தும்போது, "சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதை செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன்" – அப் 3:17.

எனவே, நாம் பெற்றுள்ள சாதகமான வாய்ப்பின் அடிப்படையில், தெய்வீக ஞானம் மற்றும் அன்பினால், நமக்கு பொருத்தமான எவ்வித அனுபவங்கள் நம்மேல் வரவேண்டுமென அனுமதிக்கப்படுகிறதோ, அவைகளுக்கு யோபுவைக் காட்டிலும் இன்னும் அதிகமாக நாம் நம்மை பரிபூரணமாக ஒப்புவிக்கவேண்டும். நாம் பிள்ளைகளானால், நமக்குண்டாகும் அனுபவங்கள் அனைத்தும் தேவ வழிநடத்துதலின்படியும், ஒழுங்கு முறையின்படியும் வருகிறது என ஏற்றுக்கொள்வதற்கே நாம் பிணைக்கப்பட்டிருக்கிறோம்.

"என்னுடையதென்று சொல்லிக்கொள்ள
எதுவுமில்லை,
அளித்த அவரைப் பற்றிக்கொண்டேன்
என் இருதயம், என் பெலன், என் ஜீவன்,
என் எல்லாமே
என்றென்றும் இனி அவருடையவைகளே"

———————————



For More E books and Tracks
Kindly Contact the email - victorgnanaraj01@gmail.com
Coimbatore Bible Students